பக்கங்கள்: எட்டு
விலை ரூபா 5-00

Registered as a News Paper in Sri Lanka

# வலம்புரி
VALAMPURI

சங்கு 02 வள்ளுவர் ஆண்டு 2032 பங்குனி 11 சனிக்கிழமை 24-03-2001 தொலைபேசி: 3378 ஒலி: 95

மங்கையரின் அங்கமெலாம் தங்க நகைகளால் மின்னிப் பேசிட இன்றேவிரையுங்கள்!
அர்ச்சனா ஜுவலர்ஸ்
118, கஸ்தூரியார் வீதி,
176/1, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.
(கி/1621)

## புலிகள் யுத்தநிறுத்தம் செய்த போதிலும் அரசு சமாதான நடவடிக்கையில் இறங்கவில்லை

### எரிக்சோல் ஹெய்ம் வெளிப்படையாக அறிவிப்பு

(கொழும்பு)
தமிழீழ விடுதலைப் புலிகள் யுத்த நிறுத்த நீடிப்பு அறிவிப்பை வரவேற்று நோர்வேயின் தூதுவர் எரிக்சோல் ஹெய்ம் அளித்த பேட்டியின் முக்கிய அம்சங்கள் நேற்றைய வலம்புரியில் வெளியாகியிருந்தது. அப் பேட்டியின் மிகுதிபகுதி இங்கு கேள்வி- பதிலாகத்தரப் படுகிறது.

★ கேள்வி:
தமிழீழ விடுதலைப் புலிகள் தங்களது ஒருதலைப்பட்ச போர் நிறுத்தத்தை மீண்டும் ஒருமாதத்திற்கு நீடித்திருப்பது தொடர்பாக உங்கள் கருத்தென்ன?

→ 8ஆம் பக்கம் பார்க்க

## ★ விடுதலைப் புலிகளின் யுத்த நிறுத்த நீடிப்புக்கு தமிழ்க் கட்சிகள் வரவேற்பு!

### உடன் பேச்சை ஆரம்பிக்குக

(நமது நிருபர்)

**தமிழீழ விடுதலைப் புலிகள் சமாதானப் பேச்சுவார்த்தைக்கு வசதியாக மேலும் ஒருமாதகால யுத்தநிறுத்த அறிவிப்பை நேற்று முன்தினம அறிவித்திருந்தனர். அந்த அறிவிப்பு தொடர்பாக தமிழ்க்கட்சித் தலைமைகள் புலிகளின் யுத்தநிறுத்த அறிவிப்பை வரவேற்றுள்ளதுடன், இலங்கை அரசும் உடனடியாக யுத்த நிறுத்தம் செய்து விடுதலைப் புலிகள் சமாதானப் பேச்சுவார்த்தையில் வைத்துள்ள நம்பிக்கையையும் விசுவாசத்தையும் மதித்து அரசு ஆக்கபூர்வமாக செயலாற்ற வேண்டும். இது தமிழ் மக்களின் எதிர்பார்ப்புமாகும்.**

இலங்கையின் இனப்பிரச்சினையின் சமாதானத் தீர்வுக்கு வழிவகுக்கும் வகையில் விடுதலைப் புலிகள் நான்காவது தடவையாக அறிவித்திருக்கும் ஒருதலைப்பட்ச யுத்தநிறுத்தம் தொடர்பாக பல்வேறு தமிழ்க்கட்சிகள் வரவேற்றுள்ளன.

அகில இலங்கைத் தமிழ்க் சாங்கிரஸ் கட்சியின் பொதுச் செயலாளர் கலாநிதி என். குமரகுருபரன் கருத்துத் தெரிவிக்கையில் கூறியதாவது:

தமிழீழ விடுதலைப் புலிகள் மீண்டும் ஒரு யுத்த நிறுத்தத்தை அறிவித்திருப்பதன் மூலம் இனப்பிரச்சினைத் தீர்வுக்கு பேச்சு வார்த்தை முக்கியம் என்பதையும், அதில் அவர்கள் வைத்துள்ள நம்பிக்கையையும், விசுவாசத்தையும் எடுத்துக்காட்டியுள்ளனர்.

விடுதலைப் புலிகளைப் பயங்கரவாதிகள் என்று எவர் கூறினாலும், அவர்களிடம் ஒரு அரசியல் கலாசாரம் இருக்கிறதென்பதை இந்த யுத்த நிறுத்த நீடிப்பு எடுத்துக் காட்டுகிறது விடுதலைப் புலிகளைத் தடை செய்வதை தமிழ் மக்களின் உரிமைகள் மீது விழும் பலமான அடியாகவே நாம் கருதுகிறோம் என்றும் தெரிவித்துள்ளார்.

புளொட் அமைப்பின் தலைவர் த.சித்தார்த்தன் கருத்துத் தெரிவிக்கையில்;

விடுதலைப் புலிகள் தற்போது அறிவித்திருக்கும்யுத்த நிறுத்தத்தை நாம் வரவேற்கின்றோம். இந்த யுத்த நிறுத்தத்தை அரசு சாதகமான முறையில் பரிசீலித்து பேச்சுவார்த்தையை ஆரம்பிக்கக் கூடிய சூழ் நிலை ஒன்றை உருவாக்க வேண்டும் என்று அரசைக் கோருகிறோம். சமாதானத்தை நாடி நிற்கும் தமிழ் மக்களின் அபிலாசைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் பேச்சுக்களை உடனடியாக ஆரம்பிக்க வேண்டும் என்றும் கூறியுள்ளார்.

ரெலோ அமைப்பின் தலை

→ 8ஆம் பக்கம் பார்க்க

## விருதலைப் புலிகளின் யுத்தநிறுத்த நீடிப்பை கனடா வரவேற்கிறது

(கொழும்பு)
தமிழீழ விடுதலைப் புலிகள் நான்காவது தடவையாக மேலும் ஒருமாதகாலத்துக்கு யுத்தநிறுத்த நீடிப்பை அதிகரித்திருப்பது வரவேற்கத் தக்கது என்று இலங்கைக்கான கனடாஉயர் ஸ்தானிகர் ரூத் ஆஸ் பேர்ட் தெரிவித்துள்ளார்.

விடுதலைப் புலிகளின் ஒருமாதகால யுத்த நிறுத்த அதிகரிப்பு தொடர்பாக கனடா உயர் ஸ்தானிகர் ரூத் ஆஸ் பேர்ட் மேலும் தெரிவிக்கையில்.

இலங்கையின் இனப்பிரச்சினையை இராணுவரீதியிலோ, ஆயுத ரீதியிலோ

→ 8ஆம் பக்கம் பார்க்க

## படையினர்ஷெல்தாக்குதல் மக்கள் மீளவும் இடம் பெயர்வு

(யாழ்ப்பாணம்)
மூல்லைத்தீவுக் கடற்பரப்பில் விடுதலைப் புலிகளினால் டோறாப்படகு மூழ்கடிக்கப் பட்டதை அடுத்து கடற் பகுதிகளை அண்டிய பிரதேசங்களை நோக்கி இராணுவத்தினர் பலத்த ஷெல்தாக்குதல்களை மேற்கொண்டதாகத் தெரிகிறது.

இராணுவத்தினரின் ஷெல் தாககுதல்களை அடுத்து பாஷையூர் பகுதியில் மீளக் குடியேறிய மக்கள் மீண்டும் இடம்பெயர்ந்து தாங்கள் முன்பு தங்கியிருந்த பகுதிகளுக்குச் சென்றுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.(ம110)

## உலர் உணவு நிவாரணத்தை அதிகரிக்க அமைச்சர் டக்ளஸ் நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)
இடம்பெயர்ந்த மக்களுக்கு வழங்கப்பட்டுவரும் உலர் உணவு நிவாரணப் பொருட்களின் பெறுமதியை அதிகரிப்பதற்கு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நடவடிக்கை எடுத்து வருகிறார்.

தற்போது மாதாந்தம் ஒரு அங்கத்தவர் உள்ள குடும்பத்திற்கு 336 ரூபாவுக்கும், 2 அங்கத்தவர்உளள குடும்பத்திற்கு 616 ரூபாவுக்கும், மூன்று அங்கத்தவர் உள்ள குடும்பத்திற்கு 840 ரூபாவுக்கும், நாலு அங்கத்தவர் உள்ள குடும்பத்திற்கு 1008 ரூபாவுக்கும், ஐந்து அங்கத்தவர்களுக்கு மேற்பட்ட குடும்பத்திற்கு 1260 ரூபாவுக்கும் பெறுமதியான அரிசி, பருப்பு, சீனி, பால்மா போன்ற பொருட்கள் வழங்கப்பட்டு வருகிறது. இத் தொகையை அதிகரிப்பதற்கு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நடவடிக்கை எடுத்து வருகிறார் என்று அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (ம)

## பரியோவானுக்கு 280 ஓட்டங்கள்

(யாழ்ப்பாணம்)
யாழ் மத்திய கல்லூரி பரியோவான் கல்லூரி ஆகியவற்றுக்கிடையிலான கிரிக்கெட் சுற்றுப் போட்டியின் முதல் நாள் ஆட்டம் நேற்று முடிவடைந்தபோது மத்திய கல்லூரி ஒரு விக்கெட் இழப்புக்கு 67 ஓட்டங்களை எடுத்துள்ளது.

முதலில் துடுப்பெடுத்தாடிய பரியோவான் கல்லூரி எட்டு விக்கெட் இழப்புக்கு 280 ஓட்டங்களை பெற்றிருந்ததும் குறிப்பிடத் க்கது. (ந-4)

## ச.ச நிலையங்களுடன் கலந்துரையாடல்

(யாழ்ப்பணம்)
நல்லூர் பிரதேச சபையினால் சனசமூக நிலையங்களுக்கிடையில்நடாத்தப்படவுள்ள விளையாட்டுப்போட்டி சம்பந்தமான கலந்துரையாடலொன்று நாளை மாலை 4-00 மணிக்கு கொக்குவில் பொது நூலக கேட்போர்

→ 8ஆம் பக்கம் பார்க்க

## மோசடிகள் பலவிதம் அதில் இது ஒரு விதம்

(யாழ்ப்பாணம்)
யாழ்ப்பாணப் பல்கலைக் கழக வளாகத்தில் இயங்கும் மக்கள் வங்கிக்கிளைக்குச் சென்ற 72 வயது முதியவரொருவர் ரூபா 200 ஐக் செலுத்தி சேமிப்புக் கணக் கொன்றை ஆரம்பித்தார். நேற்று முன்தினம் அந்த வயோதிபர் ஐம்பதாயிரம் ரூபாவை மீளப் பெறுவதற்காக சேமிப்புப் புத்தகத்துடன் வங்கிக்குச் சென்றார் அவரின் புத்தகத்தில் 200 ரூபாவுக் முன்னால் 158 என்ற இலக்கம் (8ம் பக்கம் பார்க்க)

## உரிமைமீறலை தவிர்க்க வவுனியா பொலிஸாருக்கு நீதவான் கடும் உத்தரவு

(வவுனியா)
இலங்கை அரசியல் சட்டத்தில் மனிதனின் அடிப்படை உரிமைகள் உறுதிப்படுத்தப் பட்டுள்ளன. இதற்கு மாறாக வவுனியாவில் பொலிஸார் நடந்துகொள்வதை உடன் நிறுத்துமாறு வவுனியா மாவட்டநீதவான்எம் இளஞ்

→ 8ஆம் பக்கம் பார்க்க

## பண்டிகைக் காலங்களில் விலை குறைப்பு

### கூ. மொ. வி. நிலையம் முடிவு

(கொழும்பு)
பண்டிகைக் காலங்களில் அத்தியாவசிய பாவனைப் பொருட்களின் விலைகளைக் குறைப்பதற்கு கூட்டுறவு மொத்த விற்பனவு ஸ்தாபனம் முன்வந்துள்ளது.

கூட்டுறவு மொத்த விற்பனவு ஸ்தாபனம் எடுத்துள்ள இம்முடிவின்படி மைசூர்ப் பருப்பு, பெரிய வெங்காயம், செத்தல் மிளகாய், உருளைக் கிழங்கு, வெள்ளையரிசி, சிவப்பரிசி, சீனி, கடலை, வெள்ளைப்பூடு, கொத்த

→ 8ஆம் பக்கம் பார்க்க

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## சிறு விளம்பரம்

### தவறிவிட்டது

குப்பிளான் சந்தி, ஏழாலை எனும் முகவரியைச்சேர்ந்த செல்லையா பூரணம் என்பவருடைய தே. அ. அட்டை (இல. 437040079V), விசேட அ அட்டை (இ 0906003734) வீரசிங்கம் செல்லையா என்பவருடையவிசேடஅ அட்டை (இல. 0906003733), பயண அனுமதிப்பத்திரம் என்பன தவறவிடப்பட்டுள்ளன. கண்டெடுத்தவர்கள் வலம்புரி காரியாலயத்தில் ஒப்படைக்கவும் சன்மானம் வழங்கப்படும். [2657]

# இலங்கைவங்கி, மக்கள் வங்கிகளை தனியார் மயப்படுத்துவதில்லை

(கொழும்பு)

இலங்கைவங்கி, மக்கள்வங்கி ஆகிய வங்கிகளை தனியாரிடம்கையளிக்கப்போவதில்லை என அரசாங்கம் உறுதியளித்துள்ளது.

இவ்வாறு மகாவலி அபிவிருத்தி அமைச்சர் மைத்திரிபால ஸ்ரீசேன பாராளுமன்றத்தில் பேசுகையில் தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்தின் கொள்கை இவ் வங்கிகளை தொடர்ந்தும் பாதுகாப்பதாகும்.

நாட்டின் பிரதான வங்கிகளான இவ் வங்கிகள் இந்நாட்டின் பொருளாதாரத்திற்கு நீண்டகாலமாக பெரும் பங்காற்றி வந்துள்ளன.

அவற்றின் பணிகள் முக்கியமானதும் குறிப்பிடத்தக்கதுமாகும் அவற்றை தனியார் மயப்படுத்துவதில்லை என்பது அரசாங்கத்தின் உறுதியான கொள்கை ஆகும்.

இவ்வாறு அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார். (செ)

## வீதி சீரில்லை

(நல்லூர்)

வண்ணை நாச்சிமார் கோயிலடிப் பகுதியிலுள்ள, சிவப்பிரகாசம் வீதியையும், காங்கேசன்துறை வீதியையும் இணைக்கும் பிரதானபாதையான, மதவடி ஒழுங்கை குன்றுங்குழியுமாகச் சீரற்ற நிலையில் காணப்படுகிறது. (உ-103)

## குடிசன மதிப்பீடு

(கோப்பாய்)

கோப்பாய்ப் பிரதேசத்தில் குடிசன மதிப்பீட்டு வேலைகள் மிகவும் துரிதகதியில் நடைபெற்று வருவதை அவதானிக்கக்கூடியதாக உள்ளது.

இம்மதிப்பீட்டு வேலைகளில் அப்பகுதி கிராமசேவையாளர்களும் அவர்களது உதவியாளர்களும் ஈடுபட்டு வருகின்றனர். [உ-9-79]

## விளையாட்டு பயிற்சியின் போது கைமுறிவு

(யாழ்ப்பாணம்)

பாடசாலை விளையாட்டுப் போட்டிக்கான முன் ஆயத்தப் பயிற்சியில் ஈடுபட்டிருந்த அனலைதீவைச் சேர்ந்த இ. நிஷாந்தன் (வயது 15) என்ற மாணவன் கை முறிந்த நிலையில் யா/போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளான். (உ-10)

### சங்காபிஷேகம்

(இணுவில்)

சண்டிலிப்பாய் மர்தி அருள்மிகு பத்திரகாளி அம்பாள் கும்பாபிஷேக தின சங்காபிஷேகம் வரும் திங்கட்கிழமை இடம்பெறவுள்ளது.

அன்றையதினம் மாலை 6 மணிக்கு பண்டைய இலக்கியங்களில் மகளிர் போற்றப்படுகிறார்களா போற்றப்படவில்லையா என்ற பொருளில் பட்டி மன்றமும் இடம்பெறவுள்ளது. (உ-49)

## யுவதி பத்திரமாக வீடு திரும்பினார்

(வடமராட்சி-கிழக்கு)

கடந்த 19 ஆம் திகதிகொட்டடிப் பகுதியில் காணாமற் போனதாக அறிவிக்கப்பட்ட சகாயராஜா பௌலீனா [வயது 20] என்றயுவதி தனது உறவினர் வீட்டில் தங்கியிருந்து விட்டுப் பாதுகாப்பாக வீடுதிரும்பியிருப்பதாக மனித உரிமைகள் ஆணைக்குழுவின யாழ் கிளையில் உறவினர்களால்தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-43)

## மாணவர் நலன் கருதி புதியதிட்டம்

[யாழ்ப்பாணம்]

கோண்டாவில் கிழக்கில் அமைந்துள்ள விவேகானந்தா நூலகத்தில் க.பொ.த. (சா/த). க.பொ.த. [உ/த] பட்டப்படிப்பு மாணவர்களின் நலன் கருதி புதியபகுதிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. [உ]

## மண் ஏற்றுவோர் மீது சட்ட நடவடிக்கை

(வடமராட்சி கிழக்கு)

வடமராட்சி கிழக்குப்பகுதியில் மண் அள்ள முற்பட்டால் மண் அள்ளுவோருக்கு எதிராக நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்படும் என வடமராட்சிகிழக்குப் பகுதியில் உள்ள வெகுஜன அமைப்புக்கள் எச்சரிக்கை விடுத்துள்ளன.

இதனிடையே மணலுக்கு குடாநாட்டில் ஏற்பட்டுள்ள தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்வது தொடர்பாக அதிகாரிகள் மட்டத்தில் ஆராயப்பட்டு வருகிறது. [உ-43]

## க. பொ. த [சா/த] பரீட்சை பெறுபேறுகள் சில

(யாழ்ப்பாணம்)

யா/மாவட்டப் பாடசாலைகள் சிலவற்றின், கடந்த வருடம் நடைபெற்ற கல்விப் பொதுத்தராதர சாதாரண தரப்பரீட்சைப் பெறுபேறுகள் வருமாறு,

**யா/ தெல்லிப்பழை யூனியன் கல்லூரி**

விசுவகேது பிரியா— 10டி
2 மாணவர்கள்— 9டி
2 மாணவர்கள்— 8டி
2 மாணவர்கள்- 6டி
1 மாணவர்- 5டி

**யாழ். இந்து மகளிர் கல்லூரி**

சி. காயத்திரி 10டி
வே. வினித்திரா, சாயசித்திரநந்தினி 9டி, சி

**யாழ் புனித பத்திரிசியார் கல்லூரி**

சச்சிதானந்தன் வினோதன் 9டி' சி
3 மாணவர்கள் 8டி

**யாழ். பருத்தித்துறைஹாட்லிக் கல்லூரி**

எஸ். காண்டீபன், எஸ் பகீரதன், வி. முகுந்தராஜ், எஸ். சிந்துஜன், ஆர். நிஷாந்தன், எஸ். சுதன்- 9டி
10பேர்- 8டி

**யாழ். இணுவில் மத்தியகல்லூரி**

பரராஜசிங்கம் கருணாகரன்- 8டி, 2சி, தவராஜா கோகுலன்- 7டி, 3சி

**யாழ். வைத்தீஸ்வராக்கல்லூரி**

சங்கீதா நடராஜா- 7டி, 2சி, எஸ். நாகராஜா கோபிகிருஷ்ணன்- 4டி, 5சி, எஸ்
03 மாணவர்கள்- 3டி

**யாழ். கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயம்**

1 மாணவர்- 4டி, 5சி
3 மாணவர்கள்- 4டி, 4சி

## இளைஞரின் சடலம் மீட்பு

(யாழ்ப்பாணம்)

வட்டுக்கோட்டைப் பகுதி வயல் கிணறுஒன்றில் இருந்து இளைஞர் ஒருவரது சடலம் நேற்று முன்தினம் மீட்கப்பட்டது.

அதே இடத்தைச்சேர்ந்த கந்தையா கிருஷ்ணதாஸ் (வயது 28) என்பவருடைய சடலமே இதுவென அடையாளம் காணப்பட்டுள்ளது.

மேற்படி சடலம், மரண விசாரணைகளின் பொருட்டு யாழ். போதனாவைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. (உ-10)

## இன்று படக்காட்சி

[யாழ்ப்பாணம்]

யாழ். பல்கலைக்கழக புறநிலைப் படிப்புகள் அலகும் திரைப்பட வட்டமும் இணைந்து வழங்கி வரும் திரைப்படக்காட்சித் தொடரில் அடுத்ததாக பாலுமகேந்திராவினால் தொலைக்காட்சிக்காக படமாக்கப்பட்ட மூன்று மணிநேரகுறுந் திரைப்பட தொகுப்பு ஒன்று காண்பிக்கப்படவுள்ளது,

இத்திரைப்படத் தொகுப்பில் படமாகியுள்ள சிறுகதைகள் சுஜாதாவின்'' ''அம்மா'' ''நிஜத்தைதேடி ''ரேணுகா'' 'அரை வைத்தியம்'' அவசரம்'' பட்டுக்கோட்டை பிரபாகரனின் 'தாயும்தாரமும்'' 'கற்பு' மற்றும் மாலனின் 'தப்புக்கணக்கு' என்பன இடம்பெறுகின்றன.

இன்று மு.ப 10:00 மணிக்கு புவியியற்றுறை மண்டபத்தில் இடம்பெறும் இப்படக்காட்சியில் ஆர்வலர்கள் எவரும் பங்கு பெறலாம் என புறநிலைப்படிப்புகள் அலகின்இணைப்பாளர் தெரிவித்துள்ளார். (உ)

## வலைப் பந்தாட்டம்

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் கல்விவலய பாடசாலைகளில் 15, 17, 19 வயதிற்குட்பட்டவர்களுக்கான கீழ் பிரிவு வலைபந்தாட்ட இறுதிப்போட்டிகள் எதிர் வரும் 27ஆம் திகதி யா/ உடுவில் மகளிர் கல்லூரியில் பி. ப2. 00மணிக்கு வலிகாமம் வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் திருமதி இருதயநாதன் றெஜினா தலைமையில் நடைபெறவுள்ளது.

இதில் பிரதம விருந்தினராக வலிய கல்விப்பாளர் வீ. இராசதுரை கலந்து சிறப்பிக்கவுள்ளார். (உ-2)

## பயண அனுமதி வழங்கப்பட்டோர் விபரம்

மார்ச் மாதம் 23ஆம் திகதி வெளியிடப்பட்ட பட்டியலின் படி, வெளிமாவட்டங்களுக்குப் பயணம் செய்ய அனுமதி வழங்கப்பட்டவர்களின் இலக்கங்கள் பிரதேச செயலக ரீதியாகத் தரப்படுகின்றது.

**யாழ்ப்பாணம்**

| | |
|---|---|
| 180171 ஏ | 180171 பி |
| 180210 ஏ | 180210 பி |
| 180861 ஏ | 184420 ஏ |
| 184420 பி | 184420 சி |
| 184540 ஏ | 184581 ஏ |
| 184625 ஏ | 185854 ஏ |
| 185854 பி | 185873 ஏ |
| 185954 ஏ | 185954 பி |
| 186014 ஏ | 186014 பி |
| 186014 சி | 186014 டி |
| 186014 ஈ | 186014எப் |
| 186014 ஜி | 186080 ஏ |
| 186080 பி | 186109 ஏ |
| 186109 பி | 186109 சி |
| 186109 டி | 186137 ஏ |
| 186137 பி | 186137 சி |
| 186137 டி | 186140 ஏ |
| 186144 ஏ | 186164 ஏ |
| 186164 பி | 186164 சி |
| 186165 ஏ | 186174 ஏ |
| 186174 பி | 186174 சி |
| 186312 ஏ | |

**கோப்பாய்**

| | |
|---|---|
| 163773 ஏ | 163773 பி |
| 180940 ஏ | 180940 பி |
| 180940 சி | 182881 ஏ |
| 182881 பி | 182986 ஏ |
| 182986 பி | 182999 ஏ |
| 184118 ஏ | 184118 பி |
| 184118 சி | 184118 டி |
| 186562 ஏ | 184518 ஏ |
| 184518 பி | |

**உடுவில்**

| | |
|---|---|
| 184161 ஏ | 184161 பி |

**நல்லூர்**

| | |
|---|---|
| 177191 ஏ | 177199 ஏ |
| 168934 ஏ | 181881 ஏ |
| 181998 ஏ | 181998 பி |
| 181998 சி | 181998 டி |
| 184704 ஏ | 184704 பி |
| 186031 ஏ | 186031 பி |
| 18606 ஏ | 186074 ஏ |
| 186293 ஏ | 188922 ஏ |
| 188922 பி | 168922 சி |

## காங்கேசன் துறையில் 7 பேர் தடுத்து வைப்பு

[வடமராட்சி கிழக்கு]

கடந்த 17 ஆம் திகதி புதிய செம்மணிவீதி, நல்லூர்ப்பகுதியில் வைத்து கைது செய்யப்பட்ட சகோதரர்களான வேலாயுதம் ஜெயராசா, வேலாயுதம்சிவராசா மற்றும் சின்னத்துரை சுபாகரன் ஆகிய மூவரும் கடந்த புதன்கிழமை தொடக்கம் காங்கேசன்துறை தடுப்பு முகாமில் வைக்கப்பட்டுள்ளனர்.

இவ்வாறு கடந்த புதனன்று அங்கு சென்று வந்த மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்கிளை இணைப்பாளர் ஏ ஜீவேஸ்வரா தெரிவித்தார்.

இதுதவிர, போர் முனையில் படையினரால் சிறைப்பிடிக்கப்பட்ட நிமால் நவரட்ணராஜாதாமோதரம்பிள்ளை யோகரதி ஆகியோரும் மேலும் இரு பொது மக்கள் உட்பட மொத்தம் ஏழுபேர் அங்கு தடுத்து வைக்கப்பட்டிருப்பதாக அவர் தெரிவித்தார். (உ-43)


### வைத்தீஸ்வரன் மெடிக்கல் அன் கிளினிக்

(வைஜி மெடிக்கல்)

யாழ். நகரின் முதல் நிலை வைத்தியர்களின் ஆலோசனையும் பதிவு செய்யப்பட்ட வைத்தியர்களினால் வாகன அனுமதிப் பத்திரத்திற்குரிய வைத்திய பரிசோதனைகளையும் பெற்றுக் கொள்ளலாம்.

Skin (தோல்)
General (பொது)
V. O. G (மகப்பேறு)
Neuro (நரம்பியல்)
Surgary (அறுவைச் சிகிச்சை)
Paediatric (குழந்தை வைத்தியம்)

வைத்தீஸ்வரன் மெடிக்கல் (வைஜி)
(O. P. D முன்பாக)
462, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

(கி-1636)



### யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம் இலங்கை

கலைப்பீட மூன்றாம் வருட மாணவர்களுக்கான

### விசேட பொதுக்கூட்டம்

காலம்:- 28. 03.2001 புதன் கிழமை
நேரம்;- பி.ப. 2.00 மணி
இடம்:- முகாமைத்துவ மண்டபம் (M. H 2)
விடயம்:-கலைப்பீட மாணவர் ஒன்றியத்திற்கான மூன்றாம் வருடப் பிரதிநிதிகளைத்தெரிவு செய்தல்.

அனைவரும் தவறாது கலந்து கொள்ளவும்.

கலைப்பீடாதிபதி

(கி-1637)

# தபாலக சிற்றூழியர்களுக்கான பயிற்சிப் பட்டறை நாளை ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

தபாலகங்களில் கடமையாற்றும் சிற்றூழியர்களுக்கான பயிற்சிப் பட்டறை பிரதி ஞாயிறு தோறும் இடம்பெறவுள்ளது.

அஞ்சல் அத்தியட்சகர் அலுவலகத்தால் நடத்தப்படவுள்ள இப் பயிற்சிப் பட்டறை நாளைய தினம் காலை 9.00 மணிக்கு சன்மார்க்க வித்தியாலயத்தில் ஆரம்பமாகவுள்ளது.

முதற்கட்டமாக நாளை நடைபெறவுள்ள இப் பயிற்சிப் பட்டறையில் தீவுப் பகுதி தபாலகங்களைச் சேர்ந்த 25 ஊழியர்கள் கலந்து கொள்ளவுள்ளனர்.

இந் நிகழ்வில், பிரதம விருந்தினராக பிரதி அஞ்சல்மா அதிபர் சிவஞானசுந்தரமும், கௌரவ விருந்தினர்களாக அஞ்சல் அத்தியட்சகர் ரி. எஸ். சுந்தரமூர்த்தி, பிரதேச நிர்வாக உத்தியோகத்தர் ரி. கே. திருநாவுக்கரசு, கணக்காளர் தே. குணம், நுண்ணாய்வுப்பரிசோதகர் எம். சுந்தரம் ஆகியோர் கலந்து கொண்டுபயிற்சிகளை வழங்கவுள்ளனர். (உ-9)

# மிதிவெடியில் சிக்கி இளைஞன் காலிழப்பு

(யாழ்ப்பாணம்)

பொருட்களை எடுத்துவர, சரசாலைப் பகுதியில் அமைந்துள்ளவீட்டிற்குசென்ற இளைஞன் அங்கு புதைத்து வைக்கப்பட்டிருந்த மிதிவெடியில் சிக்கி கால் ஒன்றை இழந்துள்ளார்.

நேற்று இடம்பெற்ற இச் சம்பவத்தில், தற்போது அல்வாய் வடக்கில் தற்காலிகமாக வசித்துவரும் இராசதுரைசெந்தூரன்(வயது19)என்பவரே கால் ஒன்று துண்டிக்கப்பட்ட நிலையில் யாழ் போதனாவைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (உ-10)

# பிரயாண அனுமதி பத்திர விபரங்களுடன் செயலகத்திற்கு அழைப்பு

(யாழ்ப்பாணம்)

கொழும்பு நீர்ப்பாசனத் திணைக்களத்தில் தொழில்நுட்ப உதவியாளர்களை ஆட்சேர்ப்பதற்காக நேர்முகப் பரீட்சைக்கான கடிதங்களைப் பெற்றவர்கள் பிரயாண அனுமதிப் பத்திர விபரங்களுடன் 26 ஆம் திகதி, திங்கட்கிழமை காலை 9.00 மணிக்கு யாழ். மாவட்டச் செயலகத்திற்கு வருமாறு அரசாங்க அதிபர் அறிவித்துள்ளார்.

அழைக்கப்பட்டவர்களது பெயர் விபரங்கள் வருமாறு செ.இறைவன் புலோலி வடகிழக்கு, ப. பரணிதரன் அராலி வடக்கு,கே. கணேசமணி 46/3, அரசடி வீதி நல்லூர், எஸ். சாந்திகுமார் 'நாவலடி' கோப்பாய் மத்தி, ப.அருள்ராஜ் பவுந்திபுலம், காரைநகர் சி நித்தியானந்தம் நருவிலிபடி' புலோலி தெற்கு எ சஞ்சஜன் அரசடிஒழுங்கை,திருநெல்வேலி, பி.பத்மகாந்தன் மடம் ஒழுங்கை, திருநெல்வேலி, இ பரதன் 14, சட்டநாதர் வீதி, நல்லூர். செ கபிலன் 41, அம்பலவாண வீதி அத்தியடி. (உ-6)

# விளையாட்டு போட்டி

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் வடக்கு றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலையின் இல்லமெய்வல்லுநர் போட்டி இன்று காலை 8 30 மணிக்கு பாடசாலை அதிபர் க விநாயகலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

சூசையப்பர் கோயில் மைதானத்தில் நடைபெறவுள்ள இவ் இல்லமெய்வல்லுநர் போட்டியில் பிரதம விருந்தினராக கோப்பாய் கோட்டப்பிரதிக் கல்விப் பணிப்பாளர் இ சிவஞானசுந்தரம் பிரதேச சபைத் தலைவர் பூ குணசிங்கம் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (உ-9)

திட்டமிடப்பட்ட நேர அட்டவணை இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
கல்விப் பொதுத்தராதரப் பத்திர (உயர்தரப்) பரீட்சை - 2001
2001ஆம் ஆண்டு ஆகஸ்ட் 04ஆம் திகதி ஆரம்பமாகும்.

## நேர அட்டவணை

| முற்பகல் | பிற்பகல் |
|---|---|
| **ஆகஸ்ட் 04 சனிக்கிழமை** | |
| 9.00 - 12.00 | 13.00 - 15.00 |
| 05 தூய கணிதம் 1 | 03 தாவரவியல் 1 |
| 10 இணைந்த கணிதம் 1 | 09 உயிரியல் 1 |
| 54 சங்கீதம் - கீழைத்தேயம் 1 | 13 00 - 16.00 |
| 55 சங்கீதம் - கர்நாடகம் 1 | 21 பொருளியல் 1 |
| 56 சங்கீதம் - மேலைத்தேயம் 1 | பகுதி 2 - 13.00 - 15.00 |
| | பகுதி 1 - 15.00 - 16.00 |
| | 79 மலாய் 1 |
| **ஆகஸ்ட் 06 திங்கட்கிழமை** | |
| 9.00 - 12.00 | 13.00 - 16 00 |
| 03 தாவரவியல் 2 | 05 தூய கணிதம் 2 |
| 09 உயிரியல் 2 | 10 இணைந்த கணிதம் 2 |
| 21 பொருளியல் | 52 நாட்டியம் - சிங்களம் 1 |
| பகுதி 2 - 9.00 - 11.00 | 53 நாட்டியம் - பரதம் 1 |
| பகுதி 1 - 11.00 - 12.00 | |
| **ஆகஸ்ட் 07 செவ்வாய்க்கிழமை** | |
| 9.00 - 11 00 | 13 00 - 16.00 |
| 01 பௌதிகவியல் 1 | 53 நாட்டியம் - பரதம் 2 |
| 9.00 - 12.00 | |
| 30 கணக்கீடு 1 | |
| **ஆகஸ்ட் 08 புதன்கிழமை** | |
| 9.00 - 12.00 | 13.00 - 15.00 |
| 01 பௌதிகவியல் 2 | 08 விவசாய விஞ்ஞானம் 1 |
| 30 கணக்கீடு 2 | 13 00 - 16 00 |
| 51 சித்திரக் கலை 1 | 54 சங்கீதம் - கீழைத்தேயம் 2 |
| | 55 சங்கீதம் - கர்நாடகம் 2 |
| | 56 சங்கீதம் - மேலைத்தேயம் 2 |
| **ஆகஸ்ட் 09 வியாழக்கிழமை** | |
| 9.00 - 12.00 | 13.00 - 16.00 |
| 72 தமிழ் 1 | 08 விவசாய விஞ்ஞானம் 2 |
| **ஆகஸ்ட் 10 வெள்ளிக்கிழமை** | |
| 9 00 - 12.00 | 14.00 - 17.00 |
| 54 சித்திரக்கலை 2 | 46 இந்து நாகரிகம் 1 |
| **ஆகஸ்ட் 11 சனிக்கிழமை** | |
| 9.00 - 12 00 | 13 00 - 16.00 |
| 71 சிங்களம் 2 | 29 வணிக் கல்வி 1 |
| 72 தமிழ் 2 | பகுதி 2 - 13.00 - 15.00 |
| | பகுதி 1 - 15.00 - 16.00 |
| **ஆகஸ்ட் 13 திங்கட்கிழமை** | |
| 9.00 - 12.00 | 13.00 - 16.00 |
| 51 சித்திரக் கலை 3 | 29 வணிகக் கல்வி 2 |
| | பகுதி 2 - 13.00 - 15.00 |
| | பகுதி 1 - 15.00 - 16.00 |
| **ஆகஸ்ட் 14 சொவ்வாய்க்கிழமை** | |
| 9.00 - 12.00 | 13.00 - 16.00 |
| 22 புவியியல் 1 | 46 இந்து நாகரிகம் 2 |
| **ஆகஸ்ட் 15 புதன்கிழமை** | |
| 9.00-12.00 | 13.00-16.00 |
| 22 புவியியல் 2 | 24 அளவையியலும் விஞ்ஞான முறையும் 1 |
| பகுதி 2-9.00-11.00 | |
| பகுதி 1-11.00-12.00 | |
| **ஆகஸ்ட் 16 வியாழக்கிழமை** | |
| 9.00-12.00 | 13.00-16.00 |
| 22 புவியியல் 3 | 24 அளவையியலும் விஞ்ஞான முறையும் 2 |
| பகுதி 2-9.00-11.00 | |
| பகுதி 1-1:00-12.00 | |
| **ஆகஸ்ட் 17 வெள்ளிக்கிழமை** | |
| 9.00-11.00 | 14.00-17.00 |
| 04 விலங்கியல் 1 | 07 கணிதம் 1 |
| 9 00-12.00 | |
| 06 பிரயோக கணிதம் 1 | |
| 11 உயர்கணிதம் 1 | |
| 25 வரலாறு 1 | |
| பகுதி 2-9 00-12.00 | |
| பகுதி 1-11.00-12.00 | |
| **ஆகஸ்ட் 18 சனிக்கிழமை** | |
| 9.00-12.00 | 13.00-16.00 |
| 07 கணிதம் 2 | 28 மனைப்பொருளியல் 1 |
| **ஆகஸ்ட் 20 திங்கட்கிழமை** | |
| 9.00-12.00 | 13.00-16 00 |
| 01 விலங்கியல் 2 | 28 மனைப்பொருளியல் 2 |
| 06 பிரயோக கணிதம் 2 | |
| உயர் கணிதம் 2 | |
| 25A வரலாறு 2 [இந்திய] | |
| 25B வரலாறு 2 [ஐரோப்பிய] | |
| பகுதி 2-13.00-15.00 | |
| பகுதி 1-15.00-16.00 | |
| **ஆகஸ்ட் 22 புதன்கிழமை** | |
| 9.00-11.00 | 13 ஆங்கிலம் 1 |
| 02 இராசயனவியல் 1 | 13.00-16.00 |
| **ஆகஸ்ட் 23 வியாழக்கிழமை** | |
| 9.00-12.00 | 13.00-16 00 |
| 02 இரசாயனவியல் 2 | 73 ஆங்கிலம் 2 |
| **ஆகஸ்ட் 24 வெள்ளிக்கிழமை** | |
| 9.00-12.00 | 14.00-17.00 |
| 23 அரசியல் மூல தத்துவங்கள் | 58 நாடகமும் அரங்கியலும் [தமிழ்] 1 |
| பகுதி 2-9.00-11.00 | 59 நாடகமும் அரங்கியலும் [ஆங்கிலம்] 1 |
| பகுதி 1-11.00-12-00 | |
| **ஆகஸ்ட் 25 சனிக்கிழமை** | |
| 9.00-12.00 | 13.00-16-00 |
| 23 அரசியல் மூலதத்துவங்கள் 2 | 42 இந்து சமயம் 1 |
| பகுதி 2-9.00-11.00 | 43 கிறிஸ்தவம் 1 |
| பகுதி 1-11.00-12.00 | |
| **ஆகஸ்ட் 26 ஞாயிற்றுக்கிழமை** | |
| 9.00-12.00 | 13 00-16 00 |
| 13 சாதாரண ஆங்கிலம் 1 | 13 சாதாரண ஆங்கிலம் 2 |
| **ஆகஸ்ட் 27 திங்கட்கிழமை** | |
| 9.00-12.00 | 13.00-16.00 |
| 31 வணிகப் புள்ளி விபரவியல் 1 | 42 இந்து சமயம் 2 |
| 58 நாடகமும் அரங்கியலும் [தமிழ்] 2 | 43 கிறிஸ்தவம் 2 |
| 59 நாடகமும் அரங்கியலும் [ஆங்கிலம்] 2 | |
| **ஆகஸ்ட் 28 செவ்வாய்க்கிழமை** | |
| 9.00-12.00 | 13.00-15.30 |
| 31 வணிகப்புள்ளி விபரவியல் 2 | 12 பொதுச் சாதாரண பரீட்சை |
| 58 நாடகமும் அரங்கியலும் [தமிழ்] 3 | |
| 59 நாடகமும் அரங்கியலும் [ஆங்கிலம் ]3 | |

# இராசி பலன்

24.3 2001
(பங்குனி 11, சனி)
அமாவாசை முழுவதும்
பூராட்டாதி பி ப 5 09 வரை
இராகுகாலம் 9 16- 10 46
சுபநேரம் 3 14- 4 46
அமாவாசை விரதம்.

**மேடம்**
காரிய அலைச்சல், தனவிரயம், சயனசுகக்குறைவு, பிதா சிந்தை.

**இடபம்**
தனலாபம், குடும்பசுகம், நண்பர்கள் சந்திப்பு, காரிய நன்மை.

**மிதுனம்**
தொழில் மேன்மை, அதிகாரம், சுபநிகழ்ச்சி, முயற்சி கைகூடும்.

**கடகம்**
கடடுப்படுதல், அச்சமான நிலை, ஆன்றோர் ஆசி, பிரயாணம்.

**சிங்கம்**
எதிர்பாராத பிரச்சினை, வீண் தொல்லை, முயற்சி தடங்கல், வியாதி.

**கன்னி**
விருந்துபசாரம், களஸ்திர சுகம், பிரயாணம், அபூாவ சந்திப்பு.

**துலாம்**
புதிய முயற்சி, சத்துரு ஜெயம், சந்தோசமான சம்பவம், காரிய ஜெயம்.

**விருச்சிகம்**
தாழ்வு நிலை, முயற்சி மேன்மை, காரிய தடங்கல், மனக்கவலை.

**தனுசு**
பயந்த சுபாவம், உறவினர் மனஸ்தாபம், அற்பாநேசம, காரிய தாமதம்.

**மகரம்**
காரியம் கைகூடும், தனவரவு, சகோதரர் உதவி, அந்நியர் சந்திப்பு.

**கும்பம்**
வாக்குப் பகை, தனவிரயம், முயற்சி மந்தம், மனஸ்தாபம்.

**மீனம்**
உஷ்ண நிலை, ஆழ்ந்த சிந்தை, சயன சுகம், நல்ல உணவு கிடைத்தல்.

(பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது)

வளவன்

# க.பொ.த. உயர்தர மாணவர்க்கான உயிரியல்பாட வினாக்கள் - 07

## ஆசிரியர்: கே. சுகந்தன் B.Sc

### மாதிரி அமைப்புக் கட்டுரை வினாக்கள்

**வினா-I**

1. அமினோ அமிலங்களுக்கு இடையிலான பிணைப்பு ———— ஆகும்.
2. நியூக்கிளிக் மிலத்தின் அடிப்படை அலகு ——————— ஆகும்.
3. நியூக்கிளிக்கமிலத்தில் காணப்படும் வெல்லம் கொண்டுள்ள காபன் எண்ணிக்கை ———————— ஆகும்.
4. கலத்தினுள் குறிப்பிட்ட தொழில்களை மேற்கொள்ளும் கட்டமைப்புக்கள் ——— எனப்படும்.
5. கலச்சுவரற்ற கலங்களில் கலத்தின் வடிவத்தைத் தீர்மானிப்பது —————— ஆகும்.
6. எல்லா யூக்கரியோட்டா கலத்தின் வெளிப்புறத்தை எல்லைப்படுத்துவது ————— ஆகும்.
7. முதலுரு மென்சவ்வு கொண்டுள்ள பிரதான கூறுகள் புரதமும் —————— ஆகும்.
8. ஈரல் கலங்களின் குழிய உருவில் மிக அதிகளவில் சேமிக்கப்பட்டிருப்பது —————— ஆகும்.
9. காபோவைதரேட்டையும் லிப்பிட்டையும் தொகுப்பதில் தொடர்புடையது ——— —————— ER ஆகும்.
10. கல உடைவுகளையும் கழிவுகளையும் அகற்றும் நொதியங்களை ———————— கொண்டுள்ளது
11. நன்னீர் வாழ் Protists இல் —————————— புன்வெற்றிடம் காணப்படும்.
12. DNA இனை மிக அதிகளவில் கொண்டுள்ள கட்டமைப்பு ——————— ஆகும்.
13. அதிகளவு சாயத்தை எடுப்பதும் RNA இனைக் கொண்டதுமான கருவில் காணப்படும் கட்டமைப்பு —————————— ஆகும்.
14. இழைமணியின் உள்மென்சவ்வின் மடிப்புக்கள் ————————— எனப்படும்.
15. கலச் சுவாசத்தின் போது விடுவிக்கப்படுவது ———————— ஆகும்.
16. அனேகமான உடல் கலங்களின் கல எரிபொருள் எனக் கருதப்படுவது ———— ———— ஆகும்.
17. பச்சைய உருமணியினுள் காணப்படும் மென்சவ்வுப்பை —————— எனப்படும்.
18. மென்சவ்வுப்பைகள் ஒருமித்து ————————— எனப்படும்.
19. பக்ரீரியாக்களின் கலச்சுவரில் மிக அதிகளவில் காணப்படும் சேர்வை ——————— ஆகும்.
20. பக்ரீரியாவின் முதலுரு மென்சவ்வின் உள் மடிப்பு ———————— ஆகும்.

**வினா-II**

1) மனிதனில் ———— நிறமூர்த்தங்கள் உண்டு.
2) புன்னிற மூர்த்தங்கள் ———— உடன் இணைக்கப்பட்டுள்ளன.
3) தாவரமொன்றின் வாழ்க்கை வட்டத்தின் ஒரு மடியச்சந்ததி ———— சந்ததி எனப்படும்.
4) தாவரம் ஒன்றின் வாழ்க்கை வட்டத்தின் இரு மடியச் சந்ததி———சந்ததி எனப்படும்;
5) வித்தித் தாவரங்கள் ———— மூலம் வித்திகளை உண்டாக்கின்றன.
6) கலவட்டத்தில் நீண்ட காலத்தை எடுப்பது ———— ஆகும்.
7) புன்னிற மூர்த்தங்கள் வேறாக்கப்படுவது ———— இல் ஆகும்.
8) தாவரக் கலங்களில் குழிய உருப்பிரிவின் போது ———— உண்டாக்கப்படும்.
9) விலங்குக் கலங்களில் குழிய உருப்பிரிவின் போது ———— உண்டாக்கப்படும்.
10) குறுக்குப் பரிமாற்றம் நிகழ்ந்த புள்ளிகள் ———— என அழைக்கப்படும்.
11) உயிருள்ள அங்கிகளால் அனேகமாக சக்தியைப் பெறுவதற்காக பயன்படுத்தப்படும் இரசாயன மூலம் ———— ஆகும்.
12) கலச்சுவாசத்தின்போது உண்டாக்கப்படும் கழிவுகள் Co, ———— ஆகும்.
13) கலச்சுவாசத்தின்போது பெருமளவு சக்தி ———— சக்தியாக விடுவிக்கப்படும்.
14) கலச்சுவாசத்தின்போது விடுவிக்கப்படும் சக்தி ———— மூலக்கூறாகச் சேமிக்கப்படும்.
15) ATP சக்தியை விடுவிக்கும்போது ———— உண்டாகின்றது;
16) ATP கொண்டுள்ள சக்தியை வழங்கும்மூலம் ———— ஆகும்.
17 தாவரங்களில் உள்ள செலுலோஸ், மாப்பொருள் ஆகியன ———— இனால் ஆனதாகும்.
18) கலச்சுவாசத்தின் தொடக்கத்தாக்கம் ———— ஆகும்;
19) பாண் பொங்குவதற்குக் காரணமாக அமைவது மதுவத்தால் உண்டாக்கப்படும் ———— ஆகும்.
20) சித்திரிக்கமிலத்தில் உள்ள காபன்அணுக்களின் எண்ணிக்கை ———— ஆகும்;

**வினா-III**

1) கிளைக்கோப்பகுப்பால் குளுக்கோசில் இருந்து ————, ————, ———— என்பன உண்டாகின்றன
2) கிளைக் கோப் பகுப்பின் விளைவாக ———— ATP மூலக்கூறுகள் உண்டாகின்றன.
3) மதுவங்கள் காற்றின்றிய சுவாசத்தால் பைருவேற்றில் இருந்து ———— இனை உண்டாக்கின்றன
4) காற்றுச் சுவாசத்தின் போது பைருவேற் $Co_2$ இனை இழந்து ———— இனை உண்டாக்கின்றது
5) கிரப்பின் வட்டத்தின் ———— அசற்றைல் COA ஆகும்.
6) காற்றின்றிய சுவாசத்தின் போது மதுவத்தின் H வாங்கி ———— ஆகும்.
7) த சக் கலங்களில் காற்றின்றிய சுவாசத்தால் ———— உண்டாகும்.
8) ஒளித் தொகுப்பின் போது விடுவிக்கப்படும் $O_2$ இனை வழங்குவது ———— ஆகும்.
9) மணியுருக்களைச் சூழ காணப்படும் அமைப்பு ———— எனப்படும்.
10) $P_{700}$ ஆனது ஒளித் தொகுதி ———— இல் காணப்படும்.

## விடைகள்

**வினா இல-05**

1) 5 2) 4 3) 1
4) 1 5) 4 6) 2
7) 1 8) 3 9) 2
10) 2

**வினா-I**

1) D 2) B 3) C
4) A 5) B 6) B
7) D 8) 9) C
10) A 11) B 12) B
13) D 14) B 15) A
16) D

**வினா-II**

1) D 2) D 3) A
4) E 5) C 6) D
7) B 8) D 9) E
10) B 11) E 12) A
13) A 14) D

அடுத்த சனிக்கிழமை தொடரும்.

## காட்டுப்புலம் வித்தியாசாலையில் இலவச மருத்துவமுகாம்

[சங்கானை]

சுழிபுரம் காட்டுப்புலம் வித்தியாசாலையில் கடந்த புதன்கிழமை அன்று இலவச மருத்துவ பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு நோய் அறிகுறிதென்பட்ட பல மாணவர்களுக்கு தேவையானமருத்துவ சிகிச்சைகளும், ஆலோசனைகளும் வழங்கப்பட்டன.

வட பிராந்திய சத்தியசாயி சேவாச்சிரமத்தின் அனுசரணையுடன் தெல்லிப்பழை. மாவட்ட வைத்திய அதிகாரி ஆ.சிவராணியாழ். பல்கலைக் கழக மருத்துவபீட இறுதி யாண்டு மாணவர்கள் இணைந்து பரிசோதனைகளை மேற்கொண்டனர்.

இந் நிகழ்வில் வடபிராந்திய சத்திய சாயி சமித்தித் தலைவர், சித்தன் கேணி சத்திய சாயி இல்ல பெரியார்கள் மற்றும் சுழிபுரம் பொதுச்சுகாதாரப் பரிசோதகர் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

நூறிற்கும் மேற்பட்ட மாணவர்கள் பலன் பெறவழி வகுத்த மேற்படி இலவச மருத்துவமுகாம் ஏற்பாட்டாளர்களுக்கு அப்பகுதி சமூக நலன் விரும்பிகள் பாராட்டுத் தெரிவித்துள்ளனர்.

(உ-124)

# செய்தித் துளிகள்

## நிர்வாக சபை தெரிவு

(யாழ்ப்பாணம்)

மல்லாகம் கோணப்புலம் ஞானவைரவர் ஆலயத்தின் வருடாந்தப்பொதுக் கூட்டம் ஆலய மண்டபத்தில் சென்ற ஞாயிற்றுக்கிழமை தலைவர் ந.தவமணிநாயகம்தலைமையில் நடைபெற்றது:

அன்றைய தினம் 2001ஆம் ஆண்டுக்கான புதிய நிர்வாக சபைத் தெரிவும் நடைபெற்றது.

இதில் தலைவராக ந.தவமணிநாயகமும், செயலாளராக மு.அருளையாவும், பொருளாளராக கு.சிறீகரனும், உப தலைவராக க நடராசாவும், உபசெயலாளராக சி.கேசவனும் 10 நிர்வாகசபை உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டனர்: (உ-12)

## பரிஸ் வி.க முதலிடம்

(மானிப்பாய்)

சண்டிலிப்பாய் பிரதேச செயலகம் நடத்திய வருடாந்த தடகள விளையாட்டுப் போட்டியில் மானிப்பாய் பரிஸ் விளையாட்டுக் கழகம் முதலாம் இடத்தையும் இளவாலை யங்கென்றீஸ் வி.க 2ஆம் இடத்தையும் பண்டத்தரிப்பு ஐங்கரன் விளையாட்டுக்கழகம் 3ஆம் இடத்தையும் பெற்றுக் கொண்டன.

இந் நிகழ்வு கடந்த 17ஆம் 18ஆம் திகதிகளில் மானிப்பாய் இந்துக்கல்லூரி மைதானத்தில் சண்டிலிப்பாய் பிரதேச செயலர் நா.வேதநாயகன் தலைமையில் இடம்பெற்றது. (உ-120)

## வலைப் பந்தாட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட பிரதேச செயலகங்களுக்கு இடையே நடைபெற்று வரும் விளையாட்டுப் போட்டியில், வலைப்பந்தாட்டப் போட்டிகள் இன்று சனிக்கிழமை யாழ் துரையப்பா விளையாட்டு அரங்கில் ஆரம்பமாக உள்ளன.

இப்போட்டியில் பங்குபற்றும் பிரதேச செயலகங்களை காலை எட்டு மணிக்கு முன்னர் பதிவுசெய்துபோட்டிக்கு ஒத்துழைக்குமாறு யாழ் மாவட்ட விளையாட்டுத் துறை அதிகாரி திருமதி ஏ.எவ்.ஜே. ரூபசிங்கம்அறிவித்துள்ளார். (உ-10)

## 206 தபால் பொதிகள் எடுத்து வருகை

(யாழ்ப்பாணம்)

நேற்றுமுன்தினம்யாழ். வந்த சர்வதேசசெஞ்சிலுவைச்சங்க கப்பல் மூலம் யாழ். மாவட்டத்திற்கான 206 தபால் பொதிகள் எடுத்து வரப்பட்டுள்ளன. மேலும் விமானத்தின் மூலமும் 4 பொதிகள் எடுத்து வரப்பட்டுள்ளன.

கப்பலில் எடுத்து வரப்பட்ட தபால் பொதிகள் இன்று தரம்பிரிக்கப்பட்டு விநியோகிக்கப்படவுள்ளதாக பிரதமதபாலகவட்டாரங்கள் தெரிவித்தன. (உ-10)

## திருடர் ஏமாற்றம்

(இணுவில்)

மானிப்பாய் சந்தைப் பகுதியில் கடை ஒன்றின் உரிமையாளர், கடையைப் பூட்டி விட்டு வீடு திரும்ப முற்பட்ட வேளை கள்வர் குழுவால் தாக்கப்பட்டுள்ளார்.

அத்துடன் அவர் வசமிருந்த திறப்புக் கோர்வையையும் கள்வர்கள் பறித்துச் சென்றதாய் தெரியவந்துள்ளது.

இருப்பினும் அன்றைய தினம் அவர் பணத்தை தன்னுடன் எடுத்துச்செல்லாத காரணத்தினால் திருடர் ஏமாற்றத்துடன் திரும்பியுள்ளனர். (உ-49)

## ஆலயம் திருத்தம்

(நல்லூர்)

கோப்பாய் ஸ்ரீசித்திர வேலாயுத சுவாமி ஆலயத்தின் உட்பிரகார மண்டபத்தின் திருத்தவேலைகள் நடைபெற்று வருகின்றன.

இவ்வருட மஹோற்சவத்திற்கு முன்னதாக இத் திருப்பணியைப் பூர்த்தியாக்கும் முயற்சியில் பரிபாலன சபையினர் ஈடுபட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது: (உ-103)

## வருடாந்த மஹோற்சவம்

(இணுவில்)

இணுவில் அருள்மிகு சிவகாமி அம்மன் ஆலய வருடாந்த மஹோற்சவம் எதிர் வரும் 26 ஆம் திகதி திங்கட் கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து பத்துத் தினங்கள் திருவிழா நடைபெற்று எதிர் வரும் ஏப்ரல் மாதம்5 ஆம் திகதி இரதோற்சவம் நடைபெறவுள்ளது. [செ-49-2]

## கலாபூஷணம் விருது விண்ணப்பம்

[நல்லூர்]

இந்து கலாசார பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தினால் வழங்கப்படும் ''கலாபூஷணம்'' விருதுக்கான விண்ணப்பங்களை யாழ்.மாவட்டத்தில் உள்ள கலைஞர்கள், பிரதேச செயலர் அலுவலகங்களில் சமர்ப்பித்துள்ளனர். (உ-103)

## பண்டேஜ் தட்டுப்பாடு

[கோப்பாய்]

கோப்பாய் அரசினர் வைத்திய சாலையில் கடந்த சில நாட்களாக பண்டேஜுக்கு தட்டுப்பாடு நிலவி வருவதாகவும் வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளது. [உ-79]

## விளையாட்டுப் போட்டி

(யாழ்ப்பாணம்)

நீர்வேலி காமாட்சியம்பாள் சனசமூக நிலைய பாலர் முன்பள்ளி வருடாந்த விளையாட்டுப் போட்டி நாளை ஞாயிற்றுக்கிழமை பி.ப. 3 மணியளவில் மேற்படி நிலைய மைதானத்தில் நடைபெறவுள்ளது.

நிலையத்தலைவர் சி. அருந்தவநாதன் தலைமையில் நடைபெறும் இவ்விழாவிற்கு வலி: கிழக்கு பிரதேச சபைத் தலைவர் பூ குணசிங்கம் பிரதம விருந்தினராகவும்,

சர்வோதய செயற்த்திட்டப் பணிப்பாளர் எஸ். சங்கரப்பிள்ளை வலி. கிழக்கு பிரதேசசபை உப தலைவர் யு.எ றூவி ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொள்ளவுள்ளனர். (உ)

## வீதியை திருத்தி சிரமத்தை தவிர்க்குக

(யாழ்ப்பாணம்)

ஊரெழுவில் பலாலி வீதியிலிருந்து பொக்கணை ஊடாக சுன்னாகம் மின்சார சபை வலர செல்லும் வீதி நீண்டகாலமாக கவனிப்பாரற்ற நிலையில் திருத்தம் செய்யப்படாமல் இருக்கின்றது.

இன்றைய காலகட்டத்தில் நீர்வேலி, அச்செழு, கோப்பாய், கரந்தன், உரும்பிராய், ஊரெழுப்பகுதி விவசாயிகளும், பொதுமக்களும் சுன்னாகம் சந்தைக்குப் போக்குவரத்து செய்யப் பெரிதும் பாவிக்கும் பிரதான வீதியாக இது அமைந்துள்ளது குறிப்பிடத்தக்கது; (உ)

### இன்று ஒரு தகவல்

# தைரியமும், நிதானமுமே வெற்றி தரவல்லவை

ஒரு நாள் சுவாமி விவேகானந்தர் சுவிட்ஸர்லாந்தில் நடந்து சென்று கொண்டிருந்தார். அவருடன் ஒரு ஆங்கில மாதும், ஒரு ஐரோப்பிய மகனும் சென்று கொண்டிருந்தார்கள். அங்கே ஒரு தோட்டத்தில் இருந்த ஒரு காளை வெறிபிடித்து வெருண்டு அவர்கள் எதிரில் ஆக்ரோஷத்துடன் வந்து கொண்டிருந்தது. அந்தக்காளை வருவதைப பார்த்தால், எதிரில் இருப்பவர்களை முட்டித் தள்ளி மிதித்துத்தான் செல்லும் போல இருந்தது. அந்தக் கோரமான காட்சியைப்பார்த்ததும் சுவாமியுடன் சென்றபெண் பயத்தால் கலங்கி விட்டாள். அந்த ஐரோப்பிய மகன், மாட்டினிடமிருந்து தப்பித்துக் கொள்வதற்காக அருகிலிருந்த மரத்தின்மேல் ஏறிக்கொண்டான். எஞ்சியிருந்தவர் சுவாமிகள் ஒருவர் தான். அவரோ நிதானமாக நின்றார். அந்தமாடு வரும் திக்கை நோக்கினார். மாடுவெகு வேகத்துடன் அவரை எதிர்த்து வந்து கொண்டிருந்தது. ஆனால்அவருடைய நிதானமான ஆண்மை நிறைந்த சமாதானம் பொருந்திய கண்களைக் கண்டதும் அதனுடைய வேகம் குறைந்தது. அவருக்கு முன் 10 அல்லது 15 அடி தூரத்தில் 'சட்' என்று நின்று திரும்பிச் சென்றது. இதைப் பார்த்த அனைவருக்கும் வியப்பாக இருந்தது. அந்தப் பெண்ணின் முகத்தில் தண்ணீர் தெளித்து, அவளை மயக்கம் தெளிவித்தார்கள். மரத்தின் மேல் இருந்தவர் இறங்கி வந்தார். மாட்டின் செய்கை அவருக்குப் பெரிய ஆச்சரியமாக விருந்தது. 'மாடு' அவ்வளவு வேகமாக உங்களை எதிர்த்து வந்த போது நீங்கள் என்ன நினைத்துக் கொண்டிருந்தீர்கள்' என்று அவரைக் கேட்டார். தைரியம் இல்லாத கோழைகளுக்கு என்ன பதில் சொல்வது என்று சுவாமிகள் யோசனை செய்தார் போலும். ஒரு கணம் கழித்த பிறகு பதில் சொன்னார்.

நான் சுமார் 200 றாத்தல் எடையுள்ளமனிதனாயிற்றே; அது வந்த வேகத்தில் அதன் கொம்பால் என் உடம்பைத் தூக்கி எறிந்தால் நான் எவ்வளவு உயரம் சென்று கீழே விழுவேன் என்று கணக்குப் போட்டுக் கொண்டிருந்தேன என்று சொன்னார்.

உலகத்தில் பெரிய, பெரிய காரியங்களைத் தலைமை தாங்கி நடத்தும் பெரியோர்களுக்கும் தைரியமும் நிதானமும் இன்றியமையாதன, தைரியமும் நிதானமுமின்றி எந்த மகனும், எந்த மகளும் அரும் பெரும்காரியங்களைச் சாதிக்க முடியாது போர்க்களத்தில் தளகர்த்தனாக இருந்தாலும் சரி, சமாதானத்தில் மந்திரியாக இருந்தாலும் சரி, வியாபாரத்தில் ஈடுபட்டவர்களாக இருந்தாலும் சரி, யந்திரசாலைகளில் வேலை செய்பவர்களாகஇருந்தாலும் சரி எந்தத்துறையில் வேலை செய்துகொண்டிருந்தபோதிலும் அவ்வப்போது செய்ய வேண்டிய காரியங்களைத்தைரியத்துடனும், நிதானத்துடனும் செய்பவர்கள்தாம் அந்தக்காரியங்களில் வெற்றி பெறுவார்கள். தைரியம் இல்லாதிருப்பவர்களுக்கு நிதானம் வராது. நிதானம் இல்லாதவர்களுக்கு மனதில் தெளிவு இராது. தெளிவு இல்லாதவர்களிடத்தில் அறிவையும், ஆற்றலையும் காண்பது எங்ஙனம்?

தி.சு.அவிநாசிலிங்கம்

## ஐ. ரி. என் தொலைக்காட்சிக்கு 5 நாட்கள் தடைவிதிப்பு

(கொழும்பு)

பாராளுமன்றத்தில் நடைபெறும் நிகழ்வுகளை ஐந்து நாட்களுக்கு ஒளிபரப்பக் கூடாது என ஐ. ரி. என் தொலைக்காட்சிக்குத்தடை விதிக்கப்பட்டுள்ளது.

இத் தடைவிதிப்பு பற்றி சபாநாயகர் அனுரா பண்டாரநாயக்க அறிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் எம்.பிக்கள் சிலரின் உரைகள் திரிபுபடுத்தப்பட்டு ஒளிபரப்பப்பட்டதாகக் கூறியே ஐ. ரி. என் தொலைக்காட்சிக்கு தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டது. (செ)

## புலிகளின் தொலைபேசி சேவை மேலும் விஸ்தரிப்பு

[வவுனியா]

வெளிநாடுகளிலுள்ளவர்கள் இராணுவக்கட்டுப்பாடற்ற வன்னிப் பகுதியில் வசிக்கும், உறவினர்களுடன் தொலைபேசி மூலம் தொடர்புகளை ஏற்படுத்த வசதியாக விடுதலைப் புலிகள் சர்வதேச தொலைத்தொடர்பு சேவையை மேலும் விஸ்தரித்துள்ளனர்.

புதுக்குடியிருப்பு ஸ்கந்தபுரம் ஆகிய இடங்களில் 24 மணிநேர தொலைபேசி சேவையை நடாத்தி வந்த புலிகள் அச்சேவையை மேலும் விஸ்தரிக்கும் வகையில் மல்லாவியிலும் சர்வதேச தொலைபேசி சேவையொன்றினை ஏற்படுத்தியுள்ளனர்.

செய்மதி தகவல் பரிமாற்ற மூலம் இத்தொலைபேசி சேவை வன்னிப்பகுதியில் நடத்தப்படுகின்றமை இங்கு குறிப்பிடத்தக்கது. [இ]

## யாழ்.கல்வியல்கல்லூரியில் வரவேற்பு உபசாரம் ஈ. பி. டி. பி. நடத்தும்

[யாழ்ப்பாணம்]

உயர்கல்வி நிலையங்களில் இடம் பெறும் ராக்கிங் கொடூரங்களை ஒழிக்கும் வகையில் யாழ்ப்பாணம் கல்வியல் கல்லூரி புதுமுக மாணவர்களை வரவேற்கும் நிகழ்வை ஈ.பி.டிபியினர் எதிர்வரும்திங்கட்கிழமை நடத்துவர்.

இதுகுறித்து ஈ பி.டி.பியின் யாழ். மாவட்டபிரதி அமைப்பாளர் க.மணிபல்லவராஜன் கருத்துத் தெரிவிக்கையில் உயர் கல்வி நிலையங்களில் ராக்கிங் கொடூரங்களைஒழிப்பதற்கு இத்தகைய வரவேற்பு உபசாரங்கள் மிக அவசியம் எனத் தெரிவித்தார். [ம]

# சத்திரசிகிச்சை மருந்து எடுத்துவர பாதுகாப்பமைச்சு அனுமதி மறுப்பு

(வடமராட்சி கிழக்கு)

பிரெஞ்சு மருத்துவ சேவை அமைப்பான எம்.எஸ் எவ். அமைப்பினர் கொழும்பில் இருந்து யாழ்ப்பாணத்திற்கு சத்திரசிகிச்சைக்குத் தேவையான மருந்துகளை எடுத்துவர பாதுகாப்பு அமைச்சு தடை விதித்துள்ளது.

இது வரைகாலமும் தமக்குத் தேவையான மருந்துகளை இவ் அமைப்பினர் பாதுகாப்பு அமைச்சின் அனுமதியுடன் சர்வதேச செஞ்சிலுவைச்சங்க நோயாளர் கப்பல் மூலம் கொழும்பில் இருந்து எடுத்து வந்தனர்.

தற்போது இம் மருந்துகளை எடுத்துவர அனுமதி மறுத்துள்ள பாதுகாப்பு அமைச்சு, குடா நாட்டின் முழுத் தேவைக்குமுரிய மருந்துவகைகள் யாழ்ப்பாணத்தில் உள்ள சுகாதாரத்திணைக்களத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளதால் எம். எஸ் எவ் அமைப்பிற்கென தனியாக மருந்துகள் எடுத்துச் செல்லத் தேவை இல்லை என கூறியுள்ளதாய் தெரியவந்துள்ளது

இதேவேளை, பல்வேறு நெருக்கடிகள் மிகுந்த காலகட்டத்திலும் எம் எஸ் எவ் அமைப்பினர் யாழ் குடாநாட்டில் தங்கி நின்று, மந்திகை மருத்துவமனையூடாக ஏற்ற பல மருத்துவச் சேவைகள் புரிந்தமை மனம் கொள்ளத்தக்கது (உ-43)

## சமுர்த்தி செயலணி

(இணுவில்)

குப்பிளான்தெற்கு ஜே/210 கிராம அலுவலர்பிரிவுக்கான சமுர்த்தி செயலணி அமைப்பு வரும் 29ஆம் திகதி வியாழக்கிழமை இடம் பெறவுள்ளது. (உ-49)

## 5 ஆம் திகதி தேர் உற்சவம்

[நல்லூர்]

வண்ணை-ஸ்ரீ வைத்தீஸ்வரன் தேவஸ்தான வருடாந்த மஹோற்சவத்தில், வரும் 3 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பெரிய சப்பறத்திருவிழாவும், தொடர்ந்து பிச்சாடனர் உற்சவம், தேர்த் திருவிழா, தீர்த்தத்திருவிழா, பூங்காவனத் திருவிழா என்பனவும் இடம் பெறவுள்ளன. [உ-103]

## மிருதங்க அரங்கேற்றம்

(நல்லூர்)

நல்லூர் துர்க்காதேவி மணி மண்டபத்தில், நாளை 2.30 மணிக்கு, யாழ். பல்கலைக்கழக நுண்கலைக்கழக இசைத்துறை மிருதங்க விரிவுரையாளர் சங்கீதரத்தினம்-மா. சிதம்பர நாதனின் மாணவன் செல்வன் ஸ்ரீவிக்னேஸ்வரன்- உமாசுதனின் மிருதங்க அரங்கேற்றம் நடைபெறவுள்ளது.

செஞ்சொற்செல்வர். ஆறு திருமுருகனின் தலைமையில் நடைபெறவுள்ள இவ்வரங்கேற்ற நிகழ்வில், யாழ்-பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர். பொன் பாலசுந்தரம்பிள்ளை பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். (உ-103)

## வெற்றிக் கிண்ணம்

(யாழ்ப்பாணம்)

கடந்த 21 ஆம் திகதி யா/ஸ்கந்தவரோதய கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற வலிகாம வலயத்திற்கான கரப்பந்தாட்ட இறுதிப் போட்டியில் 17 வயதுக்குட்பட்ட பிரிவில் யாழ். ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணிய வித்தியாலயம் வலிகாமவலய சம்பியனுக்கான வெற்றிக் கிண்ணத்தைப் பெற்றுக் கொண்டது [உ]

## கைக்குண்டுகள் மீட்பு

(கொழும்பு)

செட்டிக்குளம் பகுதியில் தேடுதல் நடாத்திய படையினர் இரண்டு கைக்குண்டுகளையும் 20 தோட்டாக்களையும் கைப்பற்றியுள்ளதாக விசேட ஊடகத்தகவல் நிலையம் விடுத்தஅறிக்கையில் தெரிவக்கப்பட்டுள்ளது. (உ-9)

## ஊழியரின் பிள்ளைகளுக்கு ஊக்குவிப்புப்பரிசு

(யாழ்ப்பாணம்)

க. பொ. த. (சா/த), (உ/த), தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சை ஆகியவற்றில் அதி சிறந்த பெறுபேறுகளையும் பாடசாலை தொடர்பான வேறு துறைகளில் சிறப்புப் பரிசுகளையும் பெறும் வங்கி ஊழியர்களினதும், வங்கி ஒய்வூதியரினதும் பிள்ளைகளுக்கு வடமாகாண வங்கி ஒய்வூதியர் நலன்புரிச் சங்கம் ஊக்குவிப்புப் பரிசுகளை வழங்கவுள்ளது.

எனவே, 1999 ஆம் ஆண்டு நடைபெற்ற க. பொ. த. (உ/த) (சா/த), ஆண்டு 05 புலமைப்பரிசில்பரீட்சைகளில் சிறந்த பெறுபேற்றினைப் பெற்ற மாணவர்களது பெற்றோர்கள்தங்கள்விண்ணப்பங்களைச் சங்கச் செயலாளருக்கு, 'ஜெயமகால்' 214, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு ஏப்ரல்30 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பிவைக்கும்படி சங்க அமைப்பாளர்கள் அறிவித்துள்னர். (உ)

## திருக்கேதீஸ்வர ஆலய திருத்தலப் பணிகள் தொடங்க வாய்ப்பில்லை

(கொழும்பு)

திருக்கேதீஸ்வர ஆலயத்தில் இருந்தும், ஆலய சூழலிலிருந்தும் இராணுவத்தினர் எக்காரணம் கொண்டும் அகற்றப்படமாட்டார்கள் என பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் சந்திரானந்த டி.சில்வா இராணுவத் தளபதி பலகல்ல, பிரிகேடியர் ஜெயரத்தினா ஆகியோர்தெரிவித்துள்ளார்களெனதிருக்கேதீஸ்வர ஆலய திருப்பணிச் சபை வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

திருக்கேதீஸ்வர சூழலில் திருத்தல பணிகள் தொடங்கப்பட இருப்பதாலும் அதனது புனிதத்தன்மையை நிலை நாட்டவும்இராணுவத்தினரை அப்பகுதியில் இருந்துவிலக திருப்பணிச்சபையினால் வேண்டுகோள் விடுக்கப்பட்டது.

அப்பகுதியின் பாதுகாப்பினை உறுதிப்படுத்தும் வகையில் அங்கிருந்து இராணுவத்தினரை அகற்றமுடியாது என அவர்கள் கூறியுள்ளதாக ஆலயத் திருப்பணிச்சபை விடுத்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-9)

## கைச்சாத்து உடன்படிக்கை ஏற்பாடுகள் பூர்த்தி

[கொழும்பு]

அரசாங்கமும் விடுதலைப் புலிகளும் சமாதானப் பேச்சு வார்த்தைகளை ஆரம்பிப்பதற்கு ஏதுவாக இரு தரப்பினருக்கும் இடையில் புரிந்துணர்வு உடன்படிக்கையில கைச்சாத்திடுவதற்கான சகல முன்னேற்பாடுகளும் பூரணப்படுத்தப்பட்டுவட்டன.

இவ் உடன்படிக்கையில் ஜனாதிபதி சந்திரிகா பண்டார நாயக்காவும், விடுதலைப்புலிகளின் தலைவர் வே.பிரபாகரனும் கைச்சாத்திடவுள்ளனர்.

இவ்வுடன்படிக்கையில் விடுதலைப்புலிகளின் தலைவர் கைச்சாத்திடுவதற்காக வன்னிக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாகவும் இராஜதந்திர வட்டாரங்கள தெரிவித்துள்ளன. [செ]

## உதைபந்தாட்டம் இரண்டாம் சுற்று ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

யா/மாவட்டத்தில உள்ள பிரதேச செயலகங்களுக்கிடையே நடைபெற்று வரும் உதைபந்தாட்டப் போட்டியின் இரண்டாம்சுற்று, நேற்று முன்தினம்ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது.

இச் சுற்றுப் போட்டியில், கோப்பாய் பிரதேசசெயலகம் எதிர் பருத்தித்துறை பிரதேச செயலகம,

வேலணைப் பிரதேச செயலகப் எதிர் மருதங்கேணி பிரதேச செயலகம,

கரவெட்டி பிரதேச செயலகம் எதிர் சண்டிலிப்பாய் பிரதேச செயலகம்,

நல்லூர் பிரதேச செயலகம் எதிர் யாழ்ப்பாணம் பிரதேச செயலகம என்பன மோதவுள்ளன. [உ-10]

## பௌத்த ஆலயங்களில் தமிழ் மொழி போதிப்பு

(கொழும்பு)

பௌத்த ஆலயங்களில் தமிழ்மொழி போதிப்பதற்குரிய நடவடிக்கைகளை இன விவகார தேசிய ஒருமைப்பாட்டு காணிப்பொருள மூலவள அமைச்சு எடுத்துள்ளது.

சமயப்பாடசாலை உள்ள பௌத்த ஆலயங்களில் தமிழ் மொழி போதிப்பதற்குரிய ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். (செ)

## ஐ. நா.செயலர் பதவிக்கு சந்திரிகா விருப்பம்?

(இலண்டன்)

அடுத்து வரும் ஐ நா சபை பொதுச் செயலாளர் தேர்தலில் இப்போதைய செயலர் கோபி அனான் போட்டியிட இருக்கிறார்.

இப்பதவிக்கு போட்டியிட, உலகின் பலநாடுகளின் இராஜதந்திரிகள், தலைவர்கள் உட்பட இலங்கை ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்காவும் விருப்பம் கொண்டிருப்பதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இவ்வருடம் டிசெம்பர் 31 ஆம் திகதியுடன் பதவிக் காலம் முடிவுறும். கோபி அனானை தொடர்ந்து பதவியை வகிக்கும்படி 53 ஆபிரிக்க நாடுகள் கேட்டிருக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

புதிய ஐ.நா சபைச் செயலரை தெரிவு செய்யும் பொறுப்பு ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச்சபை 15 உறுப்பினரிடமும் 189 பொதுச் சபை உறுப்பினரிடமே தங்கியுள்ளது.

அமெரிக்கா, ரஷ்யா, பிரித்தானியா போன்றநாடுகள் கோபி அனானுக்கு சாதகமாக இருப்பதாக அரசியல் அவதானிகள் தெரிவித்துள்ளனர். (து)

# மஸடோனிய கெரில்லாக்களை சரணடைய காலக்கெடு விதிப்பு

### கடும் தாக்குதல்களை மேற்கொள்ளத்தயார்

[எட்டோவோ]

மஸடோனியா எல்லைக்குள் உள்ள கெரில்லாக்கள் 24 மணி நேரத்தில் தம்மிடம் சரணடைய வேண்டுமெனவும் இல்லாவிடின் தாம் மோதல் நடவடிக்கைகளை விஸ்தரிக்கப் போவதாகவும் மஸடோனியாப் படையினர் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

இதேவேளை. கெரில்லாக்களை அழிக்கும் முயற்சியில் மஸடோனியாவுக்கு இராணுவ உதவி வழங்க அமெரிக்காவும் நேட்டோ அமைப்பும் முன் வந்துள்ளன.

அத்துடன் யுத்த தளபாடம், போக்குவரத்து, தகவல் பரிமாற்றம் போன்றவற்றிலும் தாம் உதவிபுரியப் போவதாக அமெரிக்கா அறிவித்துள்ளது குறிப்பிடத்தக்கது. (உ-9)

## உலக தரிசனம்

# இந்திய முக்கிய அமைச்சர்கள் மீது தாக்குதல் நடாத்த தயார்

### கெரில்லாக்கள் அதிரடி அறிவிப்பு

(ஸ்ரீநகர்)

இந்தியாவின் முக்கிய அமைச்சர்கள் மீதும் புதுடில்லியின் மீதும் தாம் மிகமோசமான தாக்குதல்களை நடாத்தப்போவதாக காஷ்மீர் முன்னணி கெரில்லாக் குழுக்கள் எச்சரிக்கை விடுத்துள்ளன.

பாகிஸ்தானிய காஷ்மீரின் தலைநகரான முஸாபராபாதத்தில் நடைபெற்ற ஆட்சேபக் கூட்டம் ஒன்றில் உரையாற்றிய ஹிஸ்புல் முஜாஹுதீன் தலைவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

சடும் போக்கு இந்துக்கள் புனித குர்ஆனை எரித்ததைக் கண்டித்த காஷ்மீர் தலைவர்கள் மீது இந்திய அரசு தாக்குதல் நடத்தியதற்கு பழிவாங்கும் நடவடிக்கையாகவே இது அமையும் என அவ்வமைப்பு மேலும் கூறியுள்ளது. [உ]

# ஸ்ரேலின் நிலைப்பாட்டுக்கு அமெரிக்கா கண்டனம்

(வாஷிங்டன்)

யூதக் குடியேற்றங்களை விஸ்தரிக்கும் ஸ்ரேலின் நிலைப்பாடு குறித்து ஸ்ரேல் பிரதமர் ஏரியல் ஷரோனுக்கு அமெரிக்கா கண்டனச் செய்தி ஒன்றை அனுப்பியுள்ளது.

கிழக்கு ஜெருஸலேத்திற்கு அண்மித்ததாக ஸ்ரேல் சுமார் மூவாயிரம் குடியேற்றங்களை நிர்மாணிக்கவுள்ளது.

ஸ்ரேலின் செயல்இப்பிராந்தியத்தில் மேற்கொள்ளப்பட்டுவரும் சமாதான முயற்சிகளுக்கு இடையூறாகவே இருக்கும் என அமெரிக்கா சுட்டிக்காட்டியுள்ளது.

இதேவேளை, ஸ்ரேலில் யூதர்களின் எண்ணிக்கையை எதிர்வரும் 20 ஆம்நூற்றாண்டில் பன்மடங்காகஅதிகரிக்க வேண்டும் என ஷரோன் கூறியுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது. (உ-9)

# ஜெயலலிதாவின்வெற்றிக்கு ஒத்துழைக்கத் தயார்

### ராமதாஸ் உறுதிமொழி

(சென்னை)

நடைபெறவிருக்கும் இந்தியசட்டசபைத்தேர்தலில் அ. இ. அ. தி. மு. க தலைவி செல்வி ஜெயலலிதா வெற்றிபெற நாம அனைவரும் பாடுபட வேண்டுமென பா ம கட்சித்தலைவர் டாக்டர் ராமதாஸ் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

ஜெயலலிதா, மக்கள் கேட்காமலேயே மக்களின் பிரச்சினையை தீர்த்து வைக்கக் கூடியவர், அவர்களின் கோரிக்கைகளையும்நிறைவேற்றக்கூடியவர், எனவே அவரை நாம்தேர்தலில்வெற்றி பெறச் செய்ய கடுமையாக உழைக்க வேண்டும் என ராமதாஸ் மேலும் கூறியுள்ளார்.

அதேவேளை, தி மு க பற்றி அவர் கருத்துத் தெரிவிக்கையில் அதுஒரு உதவாக்கரைக் கட்சி கருணாநிதி நயவஞ்சகர் என்னையும் எனது கட்சியையும் அவர் அழிக்க நினைத்தார். அதனால்தான் நான் அ. இ. அ. தி. மு. க வில் இணைந்தேன் என்று தெரிவித்துள்ளார். (உ-9)

# த. மா. கா ஒழுக்காற்றுநடவடிக்கை ப. சிதம்பரம் கட்சியிலிருந்து நீக்கம்

(சென்னை)

தமிழ் மாநிலக் காங்கிரஸ் கட்சிக்கு எதிராகச் செயற்பட்டார் எனக் குற்றம் சாட்டி முன்னாள் மத்திய நிதியமைச்சரும் மூத்த த.மா.கா தலைவருமான ப. சிதம்பரம் தமிழ் மாநிலக் காங்கிரஸ் கட்சியில் இருந்து நீக்கப்பட்டுள்ளார் என அக்கட்சியினர் அறிவித்துள்ளனர்.

த மா கா வின் செயற்பாட்டிற்கு ஆதரவு அளிப்பதில்லை என்றும் த. மா. கா வின் கொள்கைகளுக்கு எதிரான விதத்தில் செயற்படுகிறார் எனவும் குற்றம் சாட்டியே அவர் கட்சியிலிருந்து நீக்கப்பட்டார் என்று த. மா. கா. ஒழுங்கு நடவடிக்கை தலைவர் எ. ஆர். மாரிமுத்து தெரிவித்துள்ளார்.

இதேவேளை, தற்போது ப சிதம்பரம் தமிழ் மாநில காங்கிரஸ் ஜனநாயகப் பேரவை என்ற புதிய கட்சியை ஆரம்பித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (உ-9)

## செய்திப்பரல்

★ மேற்குக் கரையின் ஹேர்பன் நகரில் இஸ்ரேல் படையினர் மீது கற்களை வீசிய குற்றத்திற்காகப் பலஸ்தீனச் சிறுவன் கைது செய்யப்பட்டுள்ளான்.

★ அமெரிக்காவுடன் ஆப்கானிஸ்தான் நல்லுறவுகளைஏற்படுத்த விரும்புவதாக, தலிபான்கள் வாஷிங்டனுக்கு அனுப்பிய கடிதத்தில் குறிபபிடப்பட்டுள்ளது.

★ யுத்தக் குற்றங்கள் விசாரணைக்கு ஐ. நா. நீதிமன்றத்திற்கு தாம் வரையறுக்கப்பட்ட அளவில் ஒத்துழைப்பு வழங்கப் போவதாக சேர்பியா அறிவித்துள்ளது.

★ பலஸ்தீனியர்கள் மீது விதிக்கப்பட்ட தடைகளை இஸ்ரேல் நீக்க வேண்டுமென விடுக்கப்பட்ட அமெரிக்காவின் வேண்டுகோளை ஷரோன் நிராகரித்துள்ளார். (உ-9)

# பறக்கும் விமானத்தின் செட்டையில் நடந்து சாதனை புரிந்த சிறுவன்!

(லண்டன்)

பறக்கும் விமானத்தின் செட்டையில் நடந்து சாதனை ஒன்றை ஏற்படுத்திய 10 வயதான சிறுவனின் துணிவை உலக செய்தி ஊடகங்கள் பலவும் பாராட்டியுள்ளன.

கைமேஸன் என்ற இச் சிறுவன் ஆகாயத்தில் மிக உயரமாகப் பறந்து கொண்டிருந்த சிறியரக விமானம் ஒன்றினது வெளிப்புறச் செட்டையின் மீது நின்று பயணித்து அதில் பல்வேறு சகாஸங்களையும் செய்து காட்டி அனைவரையும் வியப்புக்குள்ளாகியுள்ளான். (உ-9)

# மிர் விண்கலத்தின் சிதறிய துண்டுகள் பசுபிக் சமுத்திரத்தில்

[லண்டன்]

மிர் விண்கலத்தின் ஒருபகுதி பசுபிக்சமுத்திரத்தில் சிதறி வீழ்ந்துள்ளது.

பதினைந்து வருடங்களாக வானில் சுற்றிவந்த ரஷ்யாவின் இந்த விண்கலம் அண்மையில் செயலிழக்கத்தொடங்கியது.

புவியின் காற்று மண்டலத்துக்குள் நுழைந்ததும் வெடித்துச்சிதறிய துண்டுகளே பசுபிக் சமுத்திரத்தில் வீழ்ந்துள்ளன.

1986 ஆம் ஆண்டு விண்வெளிக்கு அனுப்பப்பட்ட இந்த விண்கலம் 88 ஆயிரம் தடவைபூமியை வலம்வந்துள்ளது. (து)

## பதவிக்காலம் முடிவு

(ஜெனிவா)

மனித உரிமைகளுக்கான ஐ நா. ஆணையாளர் மேரி ரொபின்ஸனின்பதவிக்காலம் எதிர்வரும் செப்ரெம்பர் மாதத்துடன் முடிவடைகிறது. (உ-7)

# பொலிஸ் நிலையம் மீது தீவிரவாதிகள் தாக்குதல் ஆயுதங்கள் மீட்கப்பட்டன

(புதுடில்லி)

இந்தியாவின் ஆந்திரப் பிரதேசத்தில் கர்நூல் மாவட்டத்தில் இரண்டு பொலிஸ் நிலையங்களை தீவிரவாத அமைப்பான மக்கள் போர்க்குழு நேற்றைய தினம் குண்டு வைத்துத் தகர்த்துள்ளது.

அத்துடன் அத்தீவிரவாதக் குழுவினர் அங்கிருந்த ஆயுத தளபாடங்களையும் கைப்பற்றி தம்முடன் எடுத்துச் சென்றுள்ளதாக அறிய முடிகிறது.

மேற்படி சம்பவம் குறித்து சிரேஷ்ட இந்தியப் பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவிக்கையில் ஏறக்குறைய 20 தீவிரவாதிகள் ஒரு வாகனத்தில் வந்து டைனமைட் குண்டுகளை வைத்து ஒரு காவல் நிலையத்தைத் தகர்த்ததாகவும் பின்னர் அங்கிருந்து வேறோர் காவல் நிலையத்திற்கு சென்று அதனையும் தகர்த்ததாகவும் கூறியுள்ளார். [உ-9]

# பங்களாதேஷ் எதிர்க்கட்சி அழுத்தம் பதவி விலகுவதாக பிரதமர் அறிவிப்பு

(டாக்கா)

பங்களாதேஷின் பிரதமர் ஷேக் ஹஸீனா தான் வரும் மாதம் 17 ஆம் திகதியன்று பதவியிலிருந்து விலகிவிடப் போவதாக அறிவித்துள்ளதுடன் யூலைமாதம் 13 ஆம் திகதியன்று தேர்தல்கள் நடத்தப்படும் எனவும் அறிவித்துள்ளார்.

இதேவேளை, பிரதமர் பதவியை விட்டு விலக வேண்டுமென அடிக்கடி வேலை நிறுத்தங்களை மேற்கொள்ளும் எதிர்க்கட்சியினர் எதிர்வரும் 13 ஆம் திகதிக்கு முன்னர் பிரதமர் பதவி விலகாவிட்டால் தாம் தொடர்ச்சியான கதவடைப்பில் ஈடுபடப் போவதாக எச்சரித்துள்ளனர்.

இவ்வாறான அழுத்தங்களாலேயே பிரதமர் விரைவாக பதவி விலகும் திகதியை அறிவித்துள்ளார் என அரசியல் நோக்கர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர். (உ-9)

## கண்காணிப்பு குழு

[கொழும்பு]

அரச கரும மொழிகள் அமுல்படுத்தப்படுவதைக் கண்காணிக்க 5பேர் கொண்ட குழு ஒன்றினை ஜனாதிபதி நியமித்துள்ளார்.

ஜனாதிபதியின் இந்நியமனம் தொடர்பான தகவல்களை ஜனாதிபதி செயலகம் வெளியிட்டுள்ளது. (உ-4)

கடலோடா கால்வல் நெடுந்தேர் கடலோடும் நாவாயும் ஓடா நிலத்து

குறள்

வலம்புரி

## யுத்தநிறுத்தம் அரசின் கையில்!

யுத்தநிறுத்த அறிவிப்பை விடுதலைப்புலிகள் நான்காவது தடவையாக அறிவித்துள்ளனர். கடந்த மூன்று அறிவிப்புகளிலும் பார்க்க நான்காவது அறிவித்தல் சற்று வித்தியாசமானது. யுத்தநிறுத்தஅறிவிப்பின் ஆயுட்காலம் ஒருமாத காலமாயினும் அரசின் போக்கிலேயே அது தங்கியுள்ளது. திடீரென அரசு படை நடவடிக்கை, ஷெல் தாக்குதல் விமானத் தாக்குதலென ஏதாவது புரட்டுக்கள்விட்டால் யுத்தநிறுத்தம் உடனடியாக ரத்தாகிவிடும். எனவே இப்போது அரசின் பக்கத்திலேயே யுத்தநிறுத்தத்தின் ஆயுட்காலம் தங்கியுள்ளது.

2000ம் ஆண்டு டிசம்பர் மாதம் 24ந் திகதிவிடுதலைப்புலிகளினால் அறிவிக்கப்பட்ட யுத்தநிறுத்தம் நீடித்து வரும்வேளையிலும் இலங்கை அரசோ மமதை கொண்டிருப்பது போல் தெரிகிறது.

தருமனின் நற்குணத்தைப் பலயீனமாக எண்ணிய துரியோதனனும்அவனது பரிவாரங்களும்'குருஷேத்திரத்தில்' மாண்டனர். அமெரிக்கா, பிரிட்டன் போன்ற ஆயுதபலம் மிக்க நாடுகள் போல் துரியோதனன் பக்கத்தில் வில்வித்தையில் விற்பன்னர்களான வீஷ்மர், துரோணர் போன்றோர் இருந்த போதிலும் துரியோதனனால் வெல்லமுடியவில்லை.

காரணம் நீதியின்றிப் போர்செய்த கொடூரமேயாகும். ஐந்தூர் கேட்டுத் தருமன்துரியோதனனிடம் தூதனுப்பிய போதிலும் அவன் எள்ளி நகையாடினானே யொழிய தனது நகைப்பே தனது தலைக்குக் காரணமாக இருக்கப் போகிறதென்பதை அறிந்திரான்.

இதே போன்றுபுலிகளின் யுத்த நிறுத்தத்தை அரசு உதாசீனம் செய்யுமாயின், ஒரு கட்டத்தில் விட்ட தவறை உணர வேண்டியும் வரும். குருஷேத்திரத்தில் நடந்தயுத்தத்தைப் பார்ப்பதற்கு கண்ணொளி கிடைக்கும் வாய்ப்புப் பெற்ற அந்தகன் திருதராட்டிரன் கொடிய யுத்தத்தைப் பார்ப்பதிலும் கண்ணொளி மங்கியிருப்பதே மேலென எண்ணினானே அதேபோன்று சிஹலஉறுமய, ஜே.வி.பி ஆகியவற்றின் நிலைமை போனாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

திறனாய்வுக்களம்

# வழுவின்றித் தமிழ் சிறந்தோங்க வழிகாட்டும் சிறந்த நூலாகத் திகழும் "உரைநடைத்தெளிவு"

**க. சொக்கலிங்கம் (சொக்கன்), வாசுகிசொக்கலிங்கம் ஆகியோர் இணைந்துஎழுதிய ''உரைநடைத்தெளிவு'' நூலின் தமிழ் நாட்டு வெளியீடாக, குமரன் பப்ளிஷர்ஸ் அண்மையில் சென்னையில் வெளியிட்டுள்ளதன் திறனாய்வு இங்கு வெளியாகிறது**

தமிழ்மொழி வழுக்களின் பகுப்பாய்வு, கட்டமைப்புப் பகுப்பாய்வு, தமிழ் மொழித் தொடர்பாடலின் அடிப்படைப் பரிமாணங்களின் விளக்கங்கள் முதலியவற்றை உள்ளடக்கிய ஓர் அகல்விரியாக்கமாக இந்நூல் அமைந்துள்ளது மொழி கற்பித்தலில் பல்வேறு நுண் உபாயங்களின் கண்டுபிடிப்புக்களும், பயன்படுகளும் உலகளாவிய முறையில்படிமலர்ச்சிகொண்டு வருகின்றன. இயற்கை அணுகுமுறை, சமுதாய மொழி கற்பித்தல்முறைமை, தொடர்பாடல் நிலைப்பட்ட கற்பித்தல், ஒலிமொழி முறைமை, முழுமையான உடற்கூற்றுத் துலங்கல்வாயிலாகக் கற்பித்தல், மௌன வழி, கருத்தேற்றக் கற்பித்தல் என்றவாறு பல்வேறு நுட்பவியல்கள் உருவாக்கப்பட்டமையின் நோக்கங்கள், மொழியை வழுவின்றிக் கற்கவும், வினையாற்றலுடன் பயன்படுத்தவுமாகும்.

### வழுவின்றிய தமிழ்

இலக்கண விதிகளினூடாகவும், விளக்கநிலைத் தெளிமுகிழ்ப்பினூடாகவும் உரைநடைத்தெளிவை ஏற்படுத்தும் கற்றல், கற்பித்தல் எழுத்தாக்கங்களைத் தமிழறிஞர்கள் பலர் முன்னெடுத்தனர். ஆறுமுக சரவண முதலியார், மு. வரதராசன், சுப்பு ரெட்டியார், பொன்னப்பன், க. பொ. இரத்தினம் முதலாம் தமிழறிஞர்கள் வரிசையில் சொக்கன் அவர்களும் வாசுகி சொக்கன் அவர்களும் வழுவின்றித் தமிழை ஆற்றுகை செய்யும் நுட்பவியல்களைக் கல்வி உளவியல் மற்றும் கற்பித்தலியற்கண்ணோட்டங்களின் வழியாக விளக்கியுள்ளனர்.

தமிழ் மொழிக்கலைத் திட்டம், தமிழ்ப்பாட நூலாக்கம், தமிழ்மொழி ஆசிரியர் பயிற்சி முதலாம் தொழிற்பாட்டு அலகுகளிலே காணப்படும், இடறல்களும் இடைவெளிகளும் மாணவரின் மொழியாற்றுகையில் எதிர்த்தாக்கங்களை ஏற்படுத்தியுள்ளன. பள்ளி மாணவர்கள் தொடக்கம் பல்கலைக் கழக மாணவர்கள் வரை அடிப்புக்கள், எழுத்துக்களுக்கு ஒலியே அடிப்படையாதல், ஆக்கச் சொற்கள், திரிசொற்கள், வேர்ச் சொற்கள், சொற்கள் சொற்றொடர்களின் அமைப்பில் புணர்ச்சி பெறும் இடம், சொற்களில் இடைவெளி விடலும் குறியீடுகளும், வழுவமைதி எனப்படும் மயக்கம், மரபுபேணுதல், நடையியல் முதலாம் உள்ளடக்கங்கள் நூலில் இடம்பெற்றுள்ளன. தொல்காப்பியம், நன்னூல் முதலாம் பழந்தமிழி து லக்கண நூல்களில் இருந்து பெருமளவு சான்றுகள் தரப்பட்டுள்ளமை நூலின் உள்ளடக்க வலிமையை உறுதிசெய்கின்றது.

### கலாநிதி சபா. ஜெயராசா

முதுநிலை விரிவுரையாளர்
கல்வியற்றுறை - யாழ். பல்கலைக்கழகம்

படைவழுக்கள் நிரம்பிய மொழியாற்றுகையைக் காண்பித்தல் அறிஞர்களின் கவனத்தை ஈர்த்துள்ளது. நாளிதழ்களிலும், ஒலிபரப்புக்களிலும் மொழிநிலை வழுக்கள் காணப்படுதலும் அவ்வப்போது சுட்டிக்காட்டப்பட்டுள்ளன. இவ்வகை முரண்பாடுகளையும் அறைகூவல்களையும் கருத்திற்கொண்டு இந் நூலாக்கம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

### வாக்கியஒழுங்கு

வாக்கியத்திலே சொல்லொழுங்கு. எழுவாய் பயனிலை அமைய வேண்டிய முறைமை, தோன்றா எழுவாய், தோன்றாப்பயனிலை, தோன்றாச் செயற்படுபொருள், முதலாம் அமைப்

மிகப்பரவலான நூலாள்கை இந்நூலில் இடம் பெற்றுள்ளது. மொழியியல் நூல்கள், திறனாய்வு நூல்கள், படைப்பியல் நூல்கள், நாளிதழ்கள் முதலியவற்றிலிருந்து பொருத்தமான சிற்றலகுகள் பெறப்பட்டு இணைக்கப்பட்டுள்ளன.

### பளிச்சீடுகள்

இலக்கணக் கட்டமைப்பின் நிறைவாகவும், முகிழ்ப்பாகவும் எழுந்து விரிசிந்தனையின் பரவலை உள்ளடக்கும் நடையியல் பற்றிய விரிப்பு இடம் பெற்றுள்ளமை மிகவும் பொருத்தமான நூற்கட்டுமானம் என்று கூறததூண்டவைக்கின்றது. மாறுபட்டு நிற்கும் நூற்கண்ணோட்டம், ஒன்றை முன்னெடுக்கும் உந்தலின் பளிச் சீடாக இந்நூல் அமைகின்றது என்று கூற இடமளிக்கின்றது நூலாசிரியர்களின் இலக்கண அறிவும், பரந்த வாசிப் புத்தளமும் ஆக்க இலக்கிய ஈடுபாடும். புதியனவாகிபரிமாணங்களைக் காட்ட வேண்டும் என்ற முனைப்பும், பல நிலைத் தரிசனங்களை உள்ளடக்க வேண்டும் என்ற விரும்பும், எழுத்தாளர்கள் பலரை நூல்வீச்சுகுள் கொண்டுவர வேண்டும் என்ற உந்தலும் உரை நடைத்தெளிவின் பளிச்சீடுகளாகின்றன.

## கிராம அபிவிருத்தி சங்கங்களின் சமாசம்

(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றுறைப் பிரதேச செயலர் பிரிவில் உள்ள கிராம அபிவிருத்திச் சங்கங்கள், மாதர் கிராம அபிவிருத்திச் சங்கங்களினை ஒன்றிணைத்து பிரதேச மட்டக் கிராம அபிவிருத்திச் சங்கங்களின் சமாசம் அமைக்கப்படவுள்ளது.

எதிர் வரும் 28 ஆம் திகதி மு.ப 10 மணிக்கு ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் பணிமனை மாநாட்டு மண்டபத்தில் கிராம அபிவிருத்திச் சங்க சமாசம் அமைக்கும் கூட்டம் இடம் பெறவுள்ளது.

இக் கூட்டத்திற்கு குறிப்பிட்ட சங்கங்களின் நிர்வாக சபையில் இருந்து தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகள் அழைக்கப்பட்டுள்ளனர்.

ஊர்காவற்றுறைப் பிரதேச செயலர் பிரிவில் கிராம அபிவிருத்திச் சங்கங்கள், மாதர் கிராம அபிவிருத்திச் சங்கங்கள் உட்பட 38 சங்கங்கள் உள்ளமை குறிப்பிடத்தக்கது.

[உ-75]

## ஐவர் அனுமதி


[கொழும்பு]

ஊவா மாகாண சபையின் ஏற்பாட்டின் பேரில் பதுளை மாவட்டத்தைச்சேர்ந்த ஐந்து தமிழ் மாணவர்களுக்கு ரஷ்யப் பல்கலைக் கழகத்தில் புலமைப்பரிசில் வழங்கப்பட்டுள்ளது.

இதில் நால்வர் வைத்தியத் துறையிலும் ஒருவர் பொறியியல் துறையிலும் அனுமதி பெற்றுள்ளனர்.

[உ-9]

## தவக்காலச் சிந்தனை - 25



கடவுளுக்கு ஏற்புடையவராகி அவரது உறவில் சங்கமிக்க என்ன செய்ய வேண்டும்? ஆலயங்கள் கட்ட வேண்டுமா? பலிகளும் வேள்வியுமா? காணிக்கைகள் செலுத்த வேண்டுமா? நோன்பிருக்க வேண்டுமா? பாதயாத்திரையாக திருத்தலங்கள் செல்ல வேண்டுமா? திருநூல்களும் மந்திரங்களும் மனப்பாடம் செய்ய வேண்டுமா? இவை யாவும் இல்லை! கடவுள் முன்னிலையில் ஒன்றும் மறைவு இல்லாமல் தன்னை ஏற்க வேண்டும்! தன் குறைநிலை உணர வேண்டும். இறைவன் மட்டுமே தன்னைக்காக்க முடியும் என்று உணர வேண்டும். தன்னை இறைவன் வசம் தர வேண்டும். பரிசேயர் எல்லாம் செய்தார். தன்னை உணரவில்லை! மாறாக தன்னை உயர்த்தினார். பாதாளத்தில் சரிந்து வீழ்ந்தார். ஆயக்காரரோ தன்னை உணர்ந்தார். தன்னைத் தாழ்த்தினார். இறைவனின் கண்களிலே நிறைவாக உயர்ந்தார். கடவுளுக்கு ஏற்புடையவரானார்.

காவலன்

## சிறந்த கால்நடை பண்ணையாளர்களுக்கு பரிசு வழங்கும் வைபவம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண கால்நடை வைத்திய அதிகாரி பிரிவுக்குட்பட்ட கால்நடைவளர்ப்பு பண்ணையாளர்களில் 2000 ஆம் ஆண்டு சிறந்த கால்நடை பண்ணையாளராக தெரிவு செய்யப்பட்டவர்களுக்கான பரிசு வழங்கும் வைபவம் இம்மாதம் 30 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மு.ப. 10.00மணிக்கு யாழ்ப்பாணம் கால்நடை வைத்திய சாலையில், கால்நடை அத்தியட்சகர் கலாநிதி எம் தங்கராசா தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் கால்நடை உதவிப்பணிப்பாளர் பி இராமநாதன் சிறப்பு விருந்தினராக கலந்து கொள்ளவுள்ளார்.

(உ-6)

## மாலுமிகளை விடுவிக்குமாறு 28-ல் சாத்வீக நிகழ்வு

[கொழும்பு]

விடுதலைப்புலிகளால்தடுத்து வைக்கப்பட்டுள்ள மாலுமிகளை விடுவிக்கக் கோரி கொழும்பு கோட்டை பகுதியில் எதிர்வரும் 28 ம் திகதி சாத்வீகமான முறையில் நிகழ்வு ஒன்று நடைபெறவுள்ளது.

விடுதலைப்புலிகளால் கைப்பற்றப்பட்ட, மிஷன்கப்பல், ஐரிஷ் மோனா கப்பல், ஆகிய கப்பல்களில் கடமை புரிந்த பதினொரு மாலுமிகளை சித்திரைப் புத்தாண்டிற்கு முன் விடுவிக்குமாறு கோரியே இச்சாத்வீக நிகழ்வு நடைபெற ஏற்பாடாகியுள்ளது.

எதிர்வரும் 28 ம் திகதி புதன்கிழமை பி.ப 4 00மணி தொடக்கம் 6.00மணி வரைக்கும் இந்நிகழ்வு நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வினை 'சமாதானத்திற்கான பெற்றோர்கள்' என்னும் அமைப்பே ஏற்பாடு செய்துள்ளது. (பெ)

## இணுவில் மத்திய கல்லூரி சம்பியனாகத் தெரிவு

(யாழ்ப்பாணம்)

உடுவில் கோட்ட பாடசாலைகள் மட்ட ரீதியில் நடைபெற்ற கரப்பந்தாட்டப் போட்டிகளில் யா-இணுவில் மத்திய கல்லூரியின் மூன்று அணிகளும் முதலாம் இடத்தைப் பெற்று சம்பியனாகத் தெரிவாகியுள்ளது.

கோட்டமட்டப் போட்டியில் பங்குபற்றிய 15, 17 19 வயதுகளுக் குட்பட்ட அணியினர் முதலாம் இடத்தைப் பெற்ற அதேவேளை 17 வயதிற்குட்பட்ட அணியினர் வலிகாமம் வலயமட்டத்தில் நடந்த கரப்பந்தாட்டப் போட்டியில் 2ஆம் இடத்தைப் பெற்றுள்ளமையும் குறிப்பிடத் தக்கதாகும்.

[உ-2]

அற்புதமான
வடிவமைப்புக்களைக்
கொண்ட
அழகிய தங்க நகைகளுக்கு
நங்கையர் நாடும் இடம்
நியூ
ராதிகாஸ்
நகை மாளிகை
189. கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்
(கி/ 1622)

# 1,100 அபிவிருத்தி தொண்டர்களுக்கு 11 நிலையங்களில் தொழிற் பயிற்சி

## ஈ. பி. டி. பி. மணிபல்லவராஜன் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் கல்வி கற்றுவிட்டு வீட்டிலிருக்கும் இளைஞர் யுவதிகளுக்கு தொழில் சார் பயிற்சி வழங்க வட பகுதி புனர் வாழ்வு புனரமைப்பு அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

இதன் பிரகாரம் யாழ். மாவட்டத்தில் ஆயிரத்து 100 அபிவிருத்தித் தொண்டர்கள் தெரிவு செய்யப்பட்டு 11 நிலையங்களில் வைத்து பயிற்சி அளிக்கப்படுமெனவும், பயிற்சிக் காலத்தின் போது மாதமொன்றுக்கு மூவாயிரம் ரூபா வழங்கப்படுமெனவும் ஈ.பி.டி.பி.யின் யாழ். மாவட்டப் பிரதி அமைப்பாளர் க. மணிபல்லவராஜன் தெரிவித்துள்ளார்.

புங்குடுதீவு, ஊர்காவற்துறை, நல்லூர், யாழ்ப்பாணம், அச்சுவேலி, நெல்லியடி, புலோலி, கொடிகாமம், சுன்னாகம், சண்டிலிப்பாய், சித்தன்கேணி ஆகிய இடங்களில் பயிற்சி நிலையங்கள் அமைக்கப்படுமெனவும், பயிற்சிக் காலம் ஆறு மாதம் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (ம)

மங்கையர்மனம்மயங்கும்
மங்காத அசல் 22கரட்
தங்க நகைகளுக்கு
சிறந்த ஸ்தாபனம்
அதுதான்
மகாநதி
ஜுவல்லறி
72A, கஸ்தூரியார் வீதி
யாழ்ப்பாணம்.
(கி/1623)

### யுத்த...

தீர்க்கமுடியாது என்று கனடா நம்புகிறது இன் நிலையில் நோர்வே நாட்டின் சமாதான முயற்சியை கனடா வரவேற்கிறது.

இது இவ்வாறு இருக்க கனடாவில் அரசியல் தஞ்சம் கோரி விண்ணப்பங்கள் சமர்ப்பித்திருக்கும் இலங்கையர்களின் மனுக்களை பரிசீலித்து வருவதாகவும், இதற்கும் இலங்கையின் இனப்பிரச்சினை தீர்வுக்கும் எந்தவிதமான தொடர்வும் இல்லை என்றும் கனடா தூதுவர் மேலும் தெரிவித்துள்ளார். (வ)

### வவுனியா

செழியன் உத்தரவிட்டுள்ளார். (வ)

### குமாரின் நினைவு மலர் வெளியீடு

(கொழும்பு)

மாமனிதர் குமார்பொன்னம்பலத்தின் முதலாம் ஆண்டு நினைவு மலர் வெளியீடும் அஞ்சலிக் கூட்டமும் நாளை கொழும்பு பம்பலப்பிட்டி கதிரேசன் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

கொழும்பு பல்கலைக் கழக சட்டத்துறைத் தலைவர் வி. ரி தமிழ்மாறன் தலைமை நடைபெறவுள்ள இக் கூட்டத்தில் இளைப்பாறிய உயர் நீதிமன்ற நீதிபதி ஒ எஸ் எம். செனவிரத்தினா, தினக்குரல் பிரதம ஆசிரியர் ஆ. சிவனேசச்செல்வன், ராவய பிரதம ஆசிரியர் விக்ரர் ஐவன், எம். எஸ். செல்லச்சாமி எம். பி நவசமாயக் கட்சி அங்கத்தவர் வ. திருநாவுக்கரசு, முன்னாள் சட்டமா அதிபர் ஷிப்னி அசீஸ் ஆகியோர் கலந்து கொண்டு உரையாற்றுவர். (வ)

### யுத்தநிறுத்த...

வர் சட்டத்தரணி என்.சிறிகாந்தா கருத்துத் தெரிவிக்கையில்;

தமிழீழ விடுதலைப் புலிகள் அறிவித்திருக்கும் மேலும் ஒருமாதகால யுத்த நிறுத்த நீடிப்பை இலங்கையிலுள்ள எந்த ஒரு தமிழனும் வரவேற்கவே செய்வர்.

விடுதலைப் புலிகளின் யுத்த நிறுத்த அறிவிப்பை ரெலோ வரவேற்கும் வேளையில் மாதா மாதம் புலிகளால் அறிவிக்கப்படும் யுத்தநிறுத்த நீடிப்பு தொடர்பாக இலங்கை அரசு முரட்டு பிடிவாதத்துடன் கூடிய மெத்தன போக்கினைக் கடைப்பிடித்து வருகிறது. இந் நிலையில் புலிகளின் யுத்த நிறுத்த நீடிப்பு எந்த விதமான ஆக்க பூர்வமான விளைவையும் தர முடியாது.

எனவே சமாதானத்தை விரும்பும் சகல சக்திகளும் இலங்கை அரசுக்கு அழுத்தம் கொடுக்கவேண்டும் எனக் கேட்டுக்கொண்டார்.

ஈ. பி. ஆர். எல். எவ் ஐச் சேர்ந்த சுரேஷ்பிறேமச்சந்திரன் கருத்து தெரிவிக்கையில்;-

விடுதலைப் புலிகள் யுத்த நிறுத்த நீடிப்பு வரவேற்கத் தக்கதொன்றாகும் புலிகளின் யுத்தநிறுத்த நீடிப்புக்கு ஆதரவாக அரசும் யுத்த நிறுத்தத்தை அறிவித்து சமாதானச் சூழலை ஏற்படுத்தாமல் தொடர்ந்தும் புலிகளை வலிந்து யுத்தத்திற்கு இழுப்பதற்குரிய நடவடிக்கைகளில் ஈடுபட்டுவருகிறது.

விடுதலைப் புலிகளில் நம்பிக்கை இல்லை என்று கூறிக் கொண்டிருக்காமல் அவர்களுடன் பேசுவதற்கு அரசு யுத்த நிறுத்தத்தை அறிவித்து தனது நல்லெண்ணத்தைக் காட்ட வேண்டும் எனக் கேட்டுள்ளார். (ம)

### புலிகள்...

★ பதில்:

இதனைப்பற்றி விபரிக்க ஒன்றுமில்லை. அவர்கள் கடைப்பிடித்து வரும் போர் நிறுத்தம் ஒழுங்காகவே நடைபெற்று வருகிறது. தென்னிலங்கையிலும், சிங்களவர்கள் வாழும் பகுதிகளிலும், முழு இலங்கையிலுமே போர்நிறுத்தம் புலிகளால் ஒழுங்காகக் கடைப்பிடிக்கப்படுகிறது. இது சமாதான முயற்சியை முன்னெடுத்துச் செல்வதற்கு மேலதிக வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுக்கும்.

★ கேள்வி;

சந்திரிகா அரசு சமாதானப் பேச்சு வார்த்தையை நடத்த முன்வருமென எதிர்பார்க்கிறீர்களா?

★ பதில்;

இது தொடர்பாக விடுதலைப் புலிகளுக்கோ, இலங்கை அரசிற்கோ யோசனைகளைத் தெரிவிக்கமுடியாது. பேச்சு வார்த்தையை நடத்த எந்த வழியில் உதவ முடியுமா? என்பதைக் கருத்திற் கொண்டு செயற்படுவோம்.

★ கேள்வி;

தற்பொழுது சமாதான முயற்சியையும், புலிகளின் போர் நிறுத்தத்தையும் இடையூறு செய்யும் முகமாக நடக்கும் இராணுவ நடவடிக்கை பற்றி உங்கள் கருத்தென்ன?

★ பதில்;

நாங்கள் இதைப்பற்றி எவ்விதமான அபிப்பிராயங்களையோ கருத்துக்களையோ தெரிவிக்கமுடியாது.

★ கேள்வி;

சமாதானம் தொடர்பா உங்கள்விளக்கங்கள் மக்கள் மத்தியில் போய்ச்சேருவதில்லை இந்தநிலையில் சமாதானம்தொடர்பான உண்மைநிலையை விளக்குவீர்களா?

★ பதில்;

நீங்கள் குறிப்பிட்டது போல் சமாதானம்பற்றி தமிழ்சமூகத்திற்கோ சிங்கள சமூகத்திற்கோ எதுவும்தெரியாது சமாதானம் தொடர்பான சகல விடையங்களையும் பொதுமககளுக்குச் சொல்ல வேண்டும் அதில்சிலவிடையங்களைமட்டுமே நான்மக்களுக்குத் தெரியப்படுத்தலாம் அத்துடன்எமது சுயவிருப்பத்தின் பேல் எதனையும் மக்களுக்குத் தெரியப்படுத்த முடியாது எனினும் 'சமாதானம் வருவதற்கான சாத்திய கூறுகள் தெரிகின்றன.

புலிகள் 4தடவைகள் போர் நிறுத்தத்தை அமுல்படுத்தி உள்ளனர். ஆனால் இலங்கை அரசு ஒரு தடவையேனும் போர்நிறுத்தத்தை அறிவிக்கவில்லை. அத்துடன் பாரிய இராணுவ நடவடிக்கையும் நடைபெறவில்லை என்பதுடன் இலங்கை அரசு எந்த விதமான சமாதான நடவடிக்கையிலும் இறங்கவில்லை ஆனாலும் ஜனாதிபதி சந்திரிகா சமாதானப் பேச்சிற்கு முன்வருவார் என நம்புகிறேன்

★ கேள்வி:

நீங்கள் சிலதினங்களுக்கு முன்னர் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கத்தை லண்டனில் சந்தித்து உரையாடியுள்ளீர்கள் அதேபோல இலங்கை ஜனாதிபதியும் நோர்யின் வெளிவிவகார அமைச்சரைச் சந்தித்து உரையாடியுள்ளார். சந்திப்பு விபரங்களைத் தருவீர்களா?

★ பதில்:

இவ்விருதரப்பினரும் சமாதானம் ஏற்படுவதற்குச் சாதகமாகவே கருத்துக்களைத் தெரிவித்துள்ளனர் என எரிக் சோல்ஹெய்ம் பதிலளித்தார் (வ)

### மோசடிகள்

சேர்க்கப்பட்டிருந்தது:

இதனை அவதானித்தவங்கி அதிகாரிகள் தமது வங்கிப்புத்தகத்துடன் ஒப்பீட்டுப் பார்த்தனர் 200 ரூபாவே பதிவு. நிலைமையைப் புரிந்து கொண்ட வங்கி அதிகாரிகள் விளக்கம் விசாரணை என ஆரம்பித்தபோது அந்த ஆசாமி தனது அடையாள அட்டையை விட்டுவிட்டு மெதுவாக நழுவிவிட்டார்.

நேற்றைய தினம் தனது அடையாள அட்டையைப் பெறுவதற்காகமீண்டும் அந்த வயோதிபர்வங்கிக்குச் சென்றார் விடுவார்களாவங்கி அதிகாரிகள் பொலிஸாருக்குத்தகவல்கொடுத்தனர்.

விரைந்து வந்த பொலிஸார் ஆசாமியைக் கைது செய்து விசாரித்தனர். இம்மோசடிக்கு வேறொரு நபரே காரணமென வயோதிபர் கூறியுள்ளார். விளக்கம் தொடர்கிறது. இம் மோசடி முயற்சி குறித்து மக்கள் வங்கியின் யாழ் பிராந்திய முகாமையாளர் கிங்ஸ்லி இராஜநாயகம் எடுத்துக் கூறுகையில் இப்படியான மோசடி நிகழ்வு முன்பு எப்போதும் நடக்கவில்லையெனக் கூறி நம்மவர்களின் நிலைமை எப்படியெல்லாம் மாறுகிறதெனக் கூறி மனவருத்தம்கொண்டார். (ந)

### பண்டிகை

மல்லி, சீரகம், மற்றும் மாஸ் கருவாடு முதலான பொருட்களின் விலைகள் நேற்றுமுதல் குறைக்கப்பட்டுள்ளது. இவ் விலைகுறைப்புப்பற்றி நேற்று நடந்த செய்தியாளர்மாநாட் உணவு மற்றும், விநியோக

### ச.ச நிலையங்

கூடத்தில் பிரதேச சபைத் தலைவர் க.மணிபல்லவராஜன் தலைமையில் நடைபெறும். (ந)

அபிவிருத்தி அமைச்சர் றெஜி றணதுங்க அறிவித்துள்ளார். (ந-4)

பண்ணிசைப் போட்டி- 2001

2001 ஆம் ஆண்டு பாடசாலை முதலாந்தவணை விடுமுறை காலத்தில் கல்வித்திணைக்களத்தின் அனுசரணையுடன் ஆண் பெண் இருபாலருக்கும் தனித்தனியாக நடாத்தப்படவிருந்த 03 பிரிவுகளைக் கொண்ட பண்ணிசைப்போட்டி தவிர்க்க முடியாத காரணத்தினால் காலவரையறையின்றி ஒத்திவைக்கப்பட்டுள்ளது என்பதை சம்பந்தப்பட்ட அனைவருக்கும் அறியத்தருகின்றேன்.

தலைவர்
சைவசமய விவகாரக் குழு
யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம்

(கி/ 1641)

நன்றி நவில்கிறோம்

கடந்த18ந்திகதி அன்றுசிவபதமடைந்த எமதுதாயார் திருமதி கண்மணி சிந்தாமணி அவர்களின்துயர்பகிர்வில் எம்மோடு இரண்டறக் கலந்து எமதுகுடும்பத்தினருக்கு எமது தாயாரின் மறைவைஒட்டிய அனுதாபச் செய்திகளை மடல்கள் மூலமாகவும் பத்திரிகைகள் வாயிலாகவும் வானொலிமூலமாகவும் தெரிவித்து எம்மைஆறுதல் படுத்திய பல்கலைக்கழக மாணவர்களுக்கும்,விரிவுரையாளர்களுக்கும் ,புதிய உயர்கல்லூரி (பி:ஏ)இறுதியாண்டு மாணவர்களுக்கும், அதேவேளை துயர்பகிர்வில் எமக்கும் அபயக்கரம் நீட்டி தோழோடுதோழ் நின்று உறுதுணை அளித்த அனைத்து உள்ளங்களுக்கும் உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவருக்கும் எமது உளமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

உரும்பிராய்
வடக்கு
உரும்பிராய்

தகவல்
பிள்ளைகள்

(கி-1642)


மின்னிடும் அசல் 22கரட் தங்க நகைகளுக்கு
நங்கையர் நாடுவது;
நியூ நகுலா ஜுவல்லறி
74, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
(கி-1639)

இப்பத்திரிகை ''வலம்புரி'' அன்கோ ஸ்தாபனத்தாரால் இல: 16, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் எனும் விலாசத்தில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2001 ஆண்டு மார்ச் மாதம் 23ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.